02 - 95

06-08-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=

# Saturday மெயில்

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*


UNIVERSITY OF JAFFNA
LIBRARY
08 AUG 2011
PERIODICALS DIVISION



# இனிமேல் புத்திசாலிகள் பிறக்கப்போவதில்லை

Registered as a Newspaper at G.P.O.

# காகிதத்திலும் கலைவண்ணம்

உயிரோட்டம் உள்ள காகித சிற்பங்களைக் கொண்டு நவீன விலங்கியல் பூங்காவை உருவாக்கி உள்ளார் அமெரிக்க ஓவியர் கல்வின்.இவர் உருவாக்கிய பண்டா,வரிக்குதிரை உள்ளிட்ட பல்வேறு அரிய உயிரோவிய சிற்பங்கள்,பார்வையாளர்களை பிரமிக்க வைக்கிறது.

கல்லிலே மட்டுமல்ல,காகிதத்திலும் கலைவண்ணம் சாத்தியமே என்கிறார் விலங்கியல் ஆர்வலரும் ஓவியருமான கல்வின் நிக்கோலஸ்.கற்பனை மற்றும் கலை நுணுக்கத்தை கலந்து இவர் உருவாக்கிய கலைப் படைப்புகள் பார்வையாளர்களின் ஏகோபித்த பாராட்டை பெற்று வருகிறது.









உயிரோவியங்களை உருவாக்க ஏ 4 அளவிலான காகிதங்களையே கல்வின் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

தனது ஓவியத் திறமை குறித்து கல்வின் கூறியதாவது;

வித்தியாசமாக ஏதாவது செய்ய வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு.என் துறையிலேயே புதுமை படைக்கலாம் என்று நினைத்த எனக்கு இந்த யுக்தி தோன்றியது.மிகவும் கஷ்டப்பட்டு நுணுக்கமான முறையில் காகித சிற்பம் உருவாக்குவதில் வெற்றி கிடைத்தது.தற்போது இதை முழுநேரத் தொழிலாகவே செய்து வருகின்றேன்.நல்ல வருமானமும் கிடைக்கிறது.ஒரு சிற்பத்தை உருவாக்க குறைந்தது 4 வாரங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை பிடிக்கும்.படைப்புக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்கிறேன்.அதிகபட்சமாக ரூ.11 இலட்சம் வரை விலை போகின்றது.இலினாய்ஸ்,சிகாகோவில் உள்ள நூலகங்களில் 75 இற்கும் அதிகமான எனது படைப்புகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.அமெரிக்கா மற்றும் கனடாவில் பல பள்ளிகள் இக்கலையை ஒரு பாடமாகவே பயிற்றுவிக்கின்றன.

உயிரோட்டமுள்ள சிற்பங்களை படைக்க முதலில் தத்ரூபமான ஓவியம் வரைந்து கொள்வேன்.அதில் திருப்தி கிடைத்த பிறகு தான் காகித சிற்பங்களை தயார் செய்வேன்.சிறிய பறவைகள் முதல் பெரிய விலங்குகள் வரை உருவாக்குகிறேன்.ஓவியத்தை சற்று தடிமனான அட்டையில் வரைந்து சிற்பங்கள் செய்ய ஏதுவாக கட் செய்து பசை கொண்டு ஒட்டி இத்தகைய காகித சிற்பங்கள் தயாரிக்கப்படுகின்றது.தேவைக்கேற்ப பஞ்சு,போம் போன்றவற்றை பயன்படுத்துவதும் உண்டு. இவை தத்ரூபமாக இருக்க சிறிய விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன.இயற்கைக் காட்சிகள்,காடுகள் போன்றவற்றை இந்த முறையில் தனித் தனியாக உருவாக்கி பின்னர் ஒன்றிணைத்து காட்சிக்கு வைத்துள்ளேன்.இக்கலையைப் பிரபலப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து முயற்சித்து வருகின்றேன்.

சிம்பன்சி,பண்டாக்கள்,வரிக்குதிரை,தவளை,ஓணான்,சிங்கம் உள்ளிட்டவை இவரது கைவண்ணத்தில் உயிர் பெற்றுள்ளன.

# சீனாவின் நாய்க் கட்டுப்பாடு

சீனாவின் ஷாங்காய் நகரில் நாய்கள் தொல்லை தாங்க முடியவில்லை.இங்கு வீட்டுக்கு வீடு நாய்கள் வளர்க்கப்படுகின்றன.இந்த நாய்கள் வீதியில் செல்வோரை கடித்துக் குதறுவதாக தினந்தோறும் புகார் மீது புகார் வருவதால் ஷாங்காய் பொலிஸார் வெறுப்பின் உச்சத்துக்கே போய்விட்டனர்.இதுபற்றி ஷாங்காய் மாநகராட்சி அதிகாரிகளிடமும் முறையிட்டனர். பொலிஸாரின் முறையீட்டை கவனமாக கேட்ட மாநகராட்சி நிர்வாகம் அதிரடியாக ஒரு உத்தரவைப் பிறப்பித்தது.

ஷாங்காய் நகரில் இனிமேல் ஒரு வீட்டுக்கு ஒரு நாய் தான் வளர்க்க வேண்டும்.ஒன்றுக்கும் மேற்பட்ட நாய்களை வளர்ப்போர் மீது வழக்கு தொடரப்படும்.நாய் வைத்திருப்போர் முறையாக மாநகராட்சி அதிகாரிகளிடம் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பது தான் அந்த அதிரடி உத்தரவு. தங்களின் ஆடம்பர வாழ்வை வெளிச்சம் போட்டு காட்டுவதற்காக காலை நேரத்தில் வீதியில் நாய்களை ஸ்டைலாக அழைத்துச் செல்லும் வோக்கிங் பாட்டிகள் இந்த உத்தரவால் முகம் வாடிப் போய் திரிகின்றனர்.

நாய்களிடம் கடி வாங்கிய அப்பாவிகளோ மாநகராட்சி அலுவலகம் இருக்கும் திசையை நோக்கி கையெடுத்து கும்பிடாத குறையாக மகிழ்ச்சியில் திளைக்கின்றனர்.



## இனிமேல்...

மனிதனின் மூளை இதற்கு மேல் வ்ளர முடியாத நிலையை எட்டி விட்டதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அளவு தொடர்பான வளர்ச்சி அல்ல. ஆற்றல் சம்பந்தப்பட்டது.

கேம்பிரிட்ஜ் யுனிவர்சிடியில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகளை வெளியிட்ட விஞ்ஞானிகள் குழு, இப்போது இருப்பதைவிட புத்திசாலியாக யாரும் பிறந்துவிடப் போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

மூளையின் செயற்பாட்டுக்கு சக்தி தேவை. செல்கள் ஒன்றுடன் ஒன்று எல்வளவு அதிகமாகவும் விரைவாகவும் தொடர்பு கொள்ள முடிகிறதோ அதை பொறுத்துத்தான் சிக்கலான வேலைகளை மூளையால் நிறைவேற்ற முடியும். கம்பியூட்டர் கடினமான கணக்குகளைப் போடும்போது அதிகமான சக்தி செலவிடப்படுவதற்கு சமமானது இது. ஒரு பிரச்சினையை பல கோணங்களில் சிந்திக்கும் போது மூளை சூடாவதாக அல்லது தலைவலியை உணர்வது அதனால்தான்.

உணவும் ஒட்சிசனும் தான் மூளைக்குத் தேவையான சக்தியை அளிக்கின்றன. எது குறைந்தாலும் மூளையின் செயல்பாடு, ஆற்றல் பாதிக்கப்படும். மொத்த உடலில் மூளையின் அளவு 2 சதவீதம் மட்டும். ஆனால் உடலுக்குக் கிடைக்கும் சக்தியில் 20 சதவீதம் மேல் மூளைதான் உபயோகிக்கிறது. நாம் சாப்பிடும் சத்தான உணவு இரத்த நாளங்கள் வழியாக செலுத்தப்படும். ஒட்சிசனின் அளவையும் அதிகரிக்க வழியேதும் இல்லை என்பதால் மூளையின் ஆற்றல் இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டது என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு.

விஞ்ஞானிகள் சொல்லிவிட்டதால் மட்டும் அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது. உடல் மூலமாக மூளைக்குக் கிடைக்கும் சக்திக்கு உச்சவரம்பாக இருக்கலாம். பஞ்சபூதங்களால் ஆன பிரபஞ்சத்தில் இருந்தே ஆழ்நிலை தியானத்தின் வாயிலாகக் கூடுதல் சக்தியை கிரகிக்கலாம் என்பது குண்டலினி யோகத்தின் மந்திரம். போலி சாமியார்கள் அதை மந்திரவித்தை மாதிரி கொச்சைப்படுத்தினாலும் புராதனமான வாழ்வியல் பயிற்சிகள் போலியல்ல.

கூட்டல், கழித்தலுக்கு கல்குலேட்டர், பெயர்கள், எண்களைப் பதிந்து வைக்க ஃபோன்புக், தீவிர தேடலுக்கு கூகுள் என வசதிகள் வந்த பின் மூளையின் பல செயற்பாடுகள் தேவையற்று முடங்கிவிட்டன. அத்தகைய வேலைகளுக்கு பயன்பட்ட செல்களையும் சக்திகளையும் வேறுவகையில் திருப்பிவிட என்ன வழி என்று ஆராய்ந்தால் பலன் கிடைக்கலாம்.

## பாதுகாப்பு எஸ்.எம்.எஸ்.




'பாதுகாப்பான உடலுறவுக்கு ஆணுறை உபயோகிப்பீர்' என்று அரசு விளம்பரம் செய்கிறது.அமெரிக்காவில் இந்த விடயத்துக்கு எஸ்.எம்.எஸ்.அனுப்பினால் போதுமாம்... நியூயோர்க் மாகாண சுகாதரத் துறை புதிதாக ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறது.மக்களின் பாதுகாப்பான உடலுறவுக்கு ஆணுறைகள் அவசியம்.இலவச ஆணுறைகள் பெற இனி எஸ்.எம்.எஸ். அனுப்பினால் போதும்.நகரின் ஆயிரம் இடங்களில் ஆணுறைப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

எஸ்.எம்.எஸ்.அனுப்பினால் நீங்கள் இருக்கும் இடத்திற்கு அருகில் ஆணுறைப் பெட்டி இருக்கும் 5 இடங்களின் முகவரி அனுப்பி வைக்கப்படும்.அங்கு சென்று இலவசமாக ஆணுறையைப் பெற்று பாதுகாப்பாக உறவு கொள்ளலாம்.

பாதுகாப்பான உறவு கொள்வதில் நியூயோர்க் மாகாணம் முன்மாதிரியாக இருக்கிறது.நாங்கள் உடலுறவை ஊக்குவிக்கவில்லை.பாதுகாப்பும் உடல்நலமுமே எங்கள் இலக்கு என்கிறார்கள் அங்குள்ள சுகாதார நலத்துறை அதிகாரிகள்.

நியூயோர்க்கில் மாதம் 30 இலட்சம் ஆணுறைகள் புழங்கப்படுவதாகவும் பலர் இந்த வசதிக்காகவே இங்கே பயணம் செய்வதாகவும் அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளார்கள்.

## தப்பிக்க வைத்த தலைமுடி



'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு' என்பார்கள்.இங்கே ஒருவர் தலைமுடியால் தப்பித்த கதை...

பிலடெல்பியா நகரில் ஒரு பெரிய வணிக வளாகம் உள்ளது.8 மாதங்களுக்கு முன்பு இங்கு ஒரு கொள்ளை நடந்தது.அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் கொள்ளையர்களின் உருவம் பதிவாகி இருந்தது.ஆனாலும் நீண்ட காலம் கழித்து தான் கொள்ளையர்கள் பிடிப்பட்டனர். திமோதி கார்பெட் என்பவன் பிடிபட்ட கொள்ளையர்களில் ஒருவன்.விசாரணையில் அவனது முகம் மற்றும் சில தடயங்கள் அவன்தான் குற்றவாளி என்பதைக் காட்டியது.ஆனால் அவனது தலைமுடி மட்டும் வீடியோவில் இருந்ததுபோல் இல்லை.கொள்ளை நடந்து நீண்ட காலம் ஆகி இருந்ததால் அவனது தலைமுடி சடைபித்து கெட்டியாக மாறி இருந்தது.எனவே கேமராவில் இருப்பது நானல்ல என்று அவன் வாதாடினான். இந்த வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் திமோதியை விடுதலை செய்தது.

'சாமிக்கு மொட்டை போடமால் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறான் கொள்ளையன்'.

## 'வலை'யில் ஆசிரியை



பென்சில்வேனியாவில் நடந்த சம்பவம் இது.அங்குள்ள பாடசாலை ஒன்றில் நடாலிமன்றோ என்பவர் ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்தார்.30 வயதான இவர் தற்போது 9 மாத கர்ப்பமாக இருக்கிறார்.அதனால் வீட்டில் ஓய்வாக இருந்து வந்தார்.

மன்றோ இணையத்தில் அரட்டை அடித்து பொழுது போக்கி வந்தார்.அதுவே இப்போது சிக்கலை கொண்டு வந்துவிட்டது.தனது தோழியுடன் இணையத்தில் சாட்டிங் செய்த அவர் மாணவர்களைப் பற்றி சூடாக கருத்து தெரிவித்து இருந்தார்.

'மாணவர்கள் அனைவரும் அறிவற்றவர்கள்,சோம்பேறிகள் கட்டவிழ்த்து விடப்பட்டவர்கள்.எல்லாவற்றுக்கும் புகார் செய்பவர்கள், தேவையில்லாததை பேசிக்கொண்டும் தூற்றிக் கொண்டும் இருப்பவர்கள், போதைப் பழக்கங்களிலும் ஈடுபடுவார்கள்' என்று வசைபாடி எழுதி இருந்தார்.

இதை அறிந்த பள்ளி நிர்வாகம் அவரை இடைநிறுத்தம் செய்ய உத்தரவிட்டது. 'ஆசிரியைக்கு மாணவர்கள் பற்றி கருத்து தெரிவிக்க உரிமை உண்டு' என்று வாதிட்டு வருகிறார் ஆசிரியையின் சட்டத்தரணி.இணையத்தளம் இவரை சிக்க வைத்த 'வலைத்தளம்' ஆகிவிட்டது.

## ஏலம் போன தொப்பி



பிரிட்டன் இளவரசர் வில்லியம்ஸுக்கு சமீபத்தில் லண்டனில் கோலாகலமாக திருமணம் நடந்தது.இந்தத் திருமண விழாவில் கலந்து கொண்ட பெண் வி.ஐ.பி.க்கள் பார்வையாளர்களின் கவனத்தை கவர்வதற்காகவும் தங்களின் அந்தஸ்தைக் காட்டும் வகையிலும் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்ட தொப்பிகளை அணிந்து வந்தனர்.இதில் இளவரசர் சார்ள்சின் தம்பி மகளான இளவரசி பெட்ரைஸ் அணிந்து வந்த தொப்பி தான் படு கலக்கலாக இருந்தது.சுருள் சுருளாக இளம் சிவப்பு நிற பட்டுத் துணியில் வடிவமைக்கப்பட்டிருந்த இந்த தொப்பி டொய்லெட் சீட் (டொய்லட் இருக்கை போல தோற்றமளிக்கும்) தொப்பி என அழைக்கப்பட்டது.திருமணத்துக்கு வந்த அனைவரின் பார்வையும் இந்தத் தொப்பி மீது தான் பதிந்திருந்தது.

இதையடுத்துத் தான் பயன்படுத்திய தொப்பியை ஏலம் விட்டு அதில் இருந்து கிடைக்கும் நிதியை ஏழைக் குழந்தைகளின் வளர்ச்சிக்காக கொடுப்பது என பெட்ரைஸ் முடிவு செய்தார்.சமீபத்தில் இந்தத் தொப்பி ஏலம் விடப்பட்டது.ஏலத்தில் பங்கேற்ற பலரும் போட்டி போட்டு ஏலம் கேட்டனர்.இறுதியில் 1 1/2 ரூபாவுக்கு இளவரசியின் தொப்பி ஏலம் எடுக்கப்பட்டதும் அனைவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

இளவரசியின் தொப்பியை ஏலம் எடுத்தவர் என்ன கூறினார் தெரியுமா? இளவரசி அணிந்திருந்த தொப்பியை நம்மால் தொட்டுக்கூட பார்க்க முடியாது என ஆரம்பத்தில் நினைத்திருந்தேன்.தற்போது அந்த தொப்பி எனக்கே எனக்கு சொந்தமாகி விட்டதை நினைத்து மகிழ்ச்சியில் திளைக்கிறேன் என்றார்.எப்படியோ நல்ல காரியத்துக்காக இந்தப் பணம் செலவிடப்படுவதில் அனைவருக்குமே மகிழ்ச்சி தான்.

# இயற்கையின் எதிரி

இயற்கைச் சூழலினை மாசுபடுத்தும் காரணிகளில் போக்குவரத்துச் சாதனங்களின் பங்களிப்பு மிக அதிகமாகும். போக்குவரத்துச் சாதனங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருட்களின் தகனத்தின் போது வெளியேறும் நச்சுவாயுக்கள், இயந்திரங்களின் இரைச்சல், எண்ணெய் கசிவுகள் என்பன சூழலினை மாசுபடுத்துகின்றன. இவ்வாறான மாசடைவானது சகல அங்கிகளின் வாழ்க்கைக் கோலத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

கைத்தொழிற்புரட்சியின் பின்னரான அறிவியற் தொழிநுட்பமானது நாடுகளின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்துகிறது. இதனால் வாகனங்களின் பயன்பாடும் அதிகரித்துக் செல்கின்றது. உலகளாவிய ரீதியில் 75 சதவீதமான வாகனங்கள் நகர்ப்புறங்களிலேயே ஓடுகின்றன. தாய்லாந்து, தென்கொரியா போன்ற நாடுகளில் ஒவ்வொரு வருடமும் வாகனங்களின் தொகை இருமடங்காக அதிகரிக்கின்றது. சீனாவில் 4 வருடத்திற்கு ஒரு முறை இருமடங்காக அதிகரிக்கின்றது.

மூன்றாம் உலகநாடுகளின் நகரங்களில் வாகனங்கள் உச்சப்பயன்பாட்டை அடையும் வரை பயன்படுத்தப்படுவதாலும் போக்குவரத்து நெரிசல் காரணமாக மிகக் குறைந்த வேகத்தில் செல்வதாலும் மற்றும் தரம் குறைந்த எரிபொருட்களைப் பயன்படுத்துவதாலும் வாகனங்கள் சூழலினை மாசுபடுத்தும் தன்மை அதிகமாகும்.

இலங்கையிலும் கடந்த காலங்களில் 32.5 சதவீதமாகக் காணப்பட்ட வாகன இறக்குமதியானது இவ்வருட அரைப்பகுதிக்குள் மாத்திரம் 56 சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதிகரித்த வாகனப்புகை வெளியேற்றமானது பல்வேறு நச்சு வாயுக்களை வளியிற் சேர்க்கிறது. பெற்றோலிய எரிபொருட்களிலிருந்து உருவாகும் நச்சுப் பொருட்களில் 98 சதவீதமான காபன்மொனொக்ஸைட்டும் 92 சதவீதமான ஐதரோகாபனும் 79 சதவீதமான நைதரசனொட்சைட்டும் 46 சதவீதமான கந்தகவீரொட்சைட்டும் வளியில் சேர்கின்றன. இவை யாவும் வளியை நஞ்சூட்டுவதுடன் புவிவெப்பமடைதலை துரிதப்படுத்துவதற்கும் பங்காற்றுகின்றன.

கசோலின் *(Gasoline)* இயந்திரங்களைக் கொண்ட வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையில் 150-200 வண்ர்யான வித்தியாசமான வாயுக்களின் சேர்வைகள் இருப்பதாகவும் அவற்றில் சில தீங்கு விளைவிப்பவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

வாகனங்கள் பயணிக்கும் வேளையில் சுற்றுப்புறத்திலுள்ள புழுதியைக் கிளறிவிடுவதாலும் வளி மிக மோசமாக மாசடைகின்றது. கிராமப் பகுதிகளில் ஏறத்தாழ 40,000 புழுதித் துகள்களும் நகரங்களில் 80,000 இற்கும் அதிகமான புழுதித் துகள்களும் ஒருநபரின் மூக்கினால் இழுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. வீதிகளை சிறந்த கட்டுமாணத்துடன் அமைக்காமையே இதற்குக் காரணமாகும். 3 ஆம் உலகநாடுகளில் புழுதி மூலமான மாசடைவு சர்வசாதாரணமாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடற்பயணங்களின் போது பாரிய கப்பல்களிலிருந்து கசியும் எண்ணெய், கப்பல்களை இயக்கப் பயன்படுத்தப்படும் எரிபொருள்கள் என்பன சமுத்திரநீர், கடற்கரை என்பவற்றை மாசடையச் செய்கின்றன. எண்ணெய்க் கப்பல்கள் விபத்துக்குள்ளாவதால் பாரியளவிலான எண்ணெய்ப் படிவுகள் உருவாகின்றன. 1978 இல் பிரான்ஸியக் கடற்கரையில் அமோகா காடிஸ் என்ற எண்ணெய்க் கப்பல்கள் விபத்துக்குள்ளானதால் அக்கரையோரம் மாசடைந்தது. 1997 இல் பனா மாநாட்டின் 'டைமன்சிரேஸ்' எனும் கப்பல் 2,57,000 தொன் மசகு எண்ணெய்யினை ஏற்றிக் கொண்டு ஜப்பானின் யொக்ககாமா துறைமுகத்திற்கு வந்தபோது ஆழம் குறைந்த பகுதியில் தரைதட்டியதால் விபத்துக்குள்ளாகியதினால் 13,400 தொன் மசகு எண்ணெய் கடலினுள் கலந்தது. 8 ஒட் வரை பரவிய இந்த எண்ணெய்ப் படிவுகள் தாய்லாந்து வளைகுடாவுக்கும் அப்பால் வரை பரவியதாகத் தெரிவிக்கப்படுகிறது. எண்ணெயின் தன்மையை வலுவிலக்கச் செய்வதற்காக இரசாயணக் கலவைகள் கடலில் தூவப்பட்டன. கடந்த வருடம் மும்பைத் துறைமுகத்திற்கு அப்பால் இரசாயனப் பொருட்களை ஏற்றி வந்த 'சித்ரா' என்ற கப்பல் பிறிதொரு கப்பலுடன் மோதியதில் மோசமான மாசடைவு ஏற்பட்டது.

அதுமட்டுமன்றி கப்பல்களை பழுதுபார்த்தல் மற்றும் கழிவகற்றல், துப்புரவுசெய்தல் போன்றவற்றினால் கடற்சூழல் மிகமோசமாக மாசடைகின்றது.

வான் மார்க்கமாக பறந்து செல்லும் விமானங்களும் சூழலினை மிக மோசமாக மாசடையச் செய்கின்றன. ஒலியை விட மிக வேகமான கொன்கோட் மற்றும் ஜெட் விமானங்கள் சூழலினை அதிகளவில் மாசடையச் செய்கின்றன. கிபிர் வகை விமானங்களினால் ஓசோன் படலம் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. வாகனங்களும் விமானங்களும் ஏறத்தாழ 90-120 டெசிபல் *(Deciples)* இரைச்சலை ஏற்படுத்துகின்றன.

கொழும்பு நகரில் பயணிக்கும் வாகனங்களினால் தினமும் 250-300 தொன் வரையான காபன் பொனொக்ஸைட், 20-50 தொன் ஹைட்ரோ காபன், 10-20 தொன் நைதரசனொட்சைட் என்பன வளியில் கலப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அது தற்போது அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.



போக்குவரத்துச் சாதனங்களிலிருந்து வெளியேறும் வாகனப் புகைகளிலுள்ள நச்சுப் பதார்த்தங்கள் உயிரினங்கள் மற்றும் தாவரங்களை நேரடியாக பாதிப்பதுடன் ஓசோன் படல ஓட்டை மற்றும் அமிலமழை என்பவற்றைத் தூண்டி மறைமுகமாகப் பாதிக்கின்றன.

காபன்மொனொக்ஸைட்டானது உயிரினங்களில் நச்சுத்தன்மையை ஏற்படுத்துவதாகும். எமது குருதியிலுள்ள ஈமோகுளோபினில் இது அதிகளவில் செறிவடைவதால் உடற்கலங்களுக்கான ஒட்சிசன் விநியோகம் குறைவடைகின்றது. இதனால் கண்பார்வைக் குறைபாடு, நுரையீரல் நோய்கள் போன்றன ஏற்படுகின்றன.

வாகனப்புகையிலுள்ள நைதரசனொட்சைட்டானது சூரிய ஒளியிலுள்ள ஹைட்ரோ காபனுடன் தாக்கமடைந்து கூட்டுப் பொருளினாலான ஒரு இரசாயன மூடுபனிப்புகையை ஏற்படுத்துவதாக அண்மைக்கால ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் பிரதான நகரங்கள், மெக்ஸிக்கோ, டோக்கியோ போன்ற பகுதிகளில் இத்தன்மை அவதானிக்கப்பட்டுள்ளது. இது நுரையீரல் கோளாறுகள் உள்ளிட்ட பல நோய்களை ஏற்படுத்துகின்றது.

வாகனங்களினால் ஏற்படுத்தப்படும் இரைச்சலானது சூழலின் அமைதியையும் மன அமைதியையும் குழப்புகின்றன. அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள *Cornell* பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் குழுவொன்று மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் ஜேர்மனியின் மியுனிச் விமான நிலையத்திற்கு அருகில் வசிக்கும் சிறுவர்களில் அதிகமானோர் உயர் இரத்த அழுத்தம், ஞாபகசக்திக் குறைவடைதல், மன உலைச்சல் போன்றன நோய்களுக்கு ஆளாகியிருப்பது தெரியவந்துள்ளது.

கடலில் பயணிக்கும் கப்பல்களினால் சமுத்திரச் சூழல் மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக எண்ணெய்க் கப்பல்கள் விபத்துக்குள்ளாவதால் ஏற்படும் எண்ணெய்ப் படலமானது சூரிய ஒளியை உட்புகவிடாது தடுப்பதால் மீனுணவான பிளாங்ரன் உயிரினங்கள் இறக்கின்றன. இதனால் மீன்களுக்குப் போதியளவான உணவு கிடைக்காமையால் அவை இறக்கின்றன.

1989 இல் அலாஸ்கா கடற்பரப்பில் எண்ணெய்க் கப்பல் ஒன்று விபத்துக் குள்ளானதில் 10 மில்லியன் கலன் எண்ணெய்க் கடலிலுள் கலந்ததுடன் அதன் காரணமாக 3000 நீர்வாழ் உயிரினங்கள் இறந்தன. மேலும் கடற்பறவைகளின் இறகுகளில் எண்ணெய்ப் படிந்ததால் 33,000 இற்கும் மேற்பட்ட கடற்பறவைகள் பறக்க முடியாது இறந்துள்ளன.

மேலும் வான்வழி போக்குவரத்துச் சாதனங்களினால் ஏற்படுத்தப்படும் மாசடைவுகள் அமில மழை மற்றும் ஓசோன் துவாரத்தை அதிகரித்துள்ளன. இவை இன்று புவிச்சூழல் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு உலகிலுள்ள பல்வேறு நாடுகளும் வாகனப் போக்குவரத்தால் ஏற்படும் மாசடைவைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. சிங்கப்பூரில் அதிக புகை வெளியிடும் வாகனங்களுக்குத் தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. இந்தியாவில் வாகனப் பயன்பாட்டைக் குறைப்பதற்காக ஒவ்வொரு ஞாயிறும் எரிபொருள் நிலையங்கள் மூடப்படுகின்றன. சீனாவில் பெற்றோலிய எரிபொருளைப் பயன்படுத்தாது சூழலினை மாசுபடுத்தாத வகையில் சூரிய சக்தியில் ஓடும் கார்கள் தயாரிக்கப்படுகின்றன.

எனவே இயற்கையுடன் இணைந்து எமது வாழ்வின் நீண்டகால நிலைத்திருப்பை உறுதிசெய்வது எம் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

த.கஜலக்ஷ்மி

# அதிகரிக்கும் குற்றங்கள்

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள போதிலும், மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் அளவு சற்றும் குறையவில்லை. கடத்தல், படுகொலை, கப்பம் பெறல், துஷ்பிரயோகம் போன்றவை தொடர்ந்தும் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

தனிப்பட்ட காரணங்கள், அரசியல் பிரச்சினைகள் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளுக்காகவும் வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள் கடத்தப்பட்டும், படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.



கடந்த இரண்டு வருடங்களில் கப்பம் பெறல், மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக நபர்களை கடத்திச் சென்றுள்ளமை தொடர்பாக நாடளாவிய ரீதியில் 1700 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் பிரசாந்த ஜெயக்கொடி கூறினார்.

இதேவேளை அண்மைக் காலமாக வடக்கு, கிழக்கில் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக கப்பம் பெறும் நோக்கிலே கடத்தப்பட்டு கொலை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தம் முடிவடைந்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்கள் வாழ்வதற்காக சுதந்திரமாக விடப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுகின்ற போதிலும், கொலைகளும் கடத்தல்களும் அதிகரித்துள்ளதுடன், துஷ்பிரயோகங்களும் இடம் பெறுகின்றன. 2008 ஆம் ஆண்டு இறுதியில் நீதி விசாரணைக்கு புறம்பாக 30 படுகொலைச் சம்பவங்கள் கிழக்கில் இடம் பெற்றுள்ளதாகவும் மனித உரிமை கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று வடக்கிலும் பாடசாலை மாணவர்கள் கடத்தப்பட்டும், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுமுள்ளதுடன் கொலைச் சம்பவங்களும் அதிகரித்து காணப்படுகின்றன.

கடந்த இரண்டு வருடங்களில் இடம்பெற்ற ஆட்கடத்தல் சம்பவங்களில் பெரும்பாலானவை கப்பம் பெறும் நோக்கத்துடனே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஏனையவை சிறிது மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கடத்தல்கள் எனவும், பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; 2009ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 926 பேர் கடத்தப்பட்டுள்ளதுடன், 2010ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் 774 பேரும் கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தனிப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள் கண்டு பிடிக்கப்பட்டு கடத்தப்பட்டவர்கள் மீட்கப்பட்டதாகவும் 202 சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரையிலும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த இரு வருடங்களில் 5000 பேர் வரையில் கடத்தப்பட்டுள்ளதாகவும், இவற்றிற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஐ.நா.வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு பல தமிழ்ப் பிரதேசங்களில், சிவில் உடையில் வந்தவர்களால் தமிழ் இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டு இன்றுவரை கண்டுபிடிக்கப்படாத சம்பவங்கள் பலவும் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இடம்பெறுகின்ற கடத்தல் சம்பவங்கள் ஒரு சிலவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படுகின்றன. பெரும்பாலானவை அச்சத்தால் முறைப்பாடு செய்யப்படுவதில்லை. இதனால் கடத்தல், கொலை, துஷ்பிரயோகச் சம்பவங்களின் எண்ணிக்கையை சரியாக குறிப்பிட முடியாது எனலாம்.

பாரதூரமான மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு அரசியல் பிரமுகர்களின் பங்களிப்பு கிடைப்பதனால் சந்தேக நபர்கள், அச்சமின்றி துணிச்சலுடன் செயற்படுகின்றனர். இவற்றிற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் குறுகிய காலத்தினுள் தீர்வினை முன்னெடுத்து, குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனைகளை வழங்க அரசு முன்வருவதன் மூலம் எதிர்காலத்தில் கடத்தல், கொலை, துஷ்பிரயோகம் போன்ற சம்பவங்களை இல்லாதொழிக்க முடியும்.

எச்.ஹுஸ்னா

# உடலின் 7 சக்கரங்கள்

மனித உடலினுள் கண்ணுக்குத் தெரியாமல் செயற்படுகின்ற ஏழு சக்கரங்கள், உடலிலுள்ள அனைத்து உறுப்புகளின் செயல்பாட்டினையும் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. இந்த ஏழு சக்கரங்களும் உடலின் வெவ்வேறு பகுதிகளில் அமைந்திருந்தாலும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஏழு சக்கரங்களையும் அவை கட்டுப்படுத்தும் உறுப்புகளைப் பற்றியும் தெரிந்து கொள்வோம்.

**மூலாதாரம்**

முதுகெலும்பின் அடிப்பாகத்தில் அமைந்துள்ள இந்த சக்கரம்தான் உடல் சக்தியின் இருப்பிடம். உயிர்வாழ வேண்டும் என்கிற ஆசையும், பிடிவாதமும் இங்கேதான் உற்பத்தி ஆகிறது. உடலின் உயிர் இயக்கத்துக்கு இது மூல காரணமாக விளங்குவதால் மூலாதாரம் என்கிற பெயரைப் பெறுகிறது.

சிறுநீரகங்களுக்கு மேலுள்ள அட்ரீனல் சுரப்பிகள் இதன் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கின்றன. சிறுநீரகங்கள், சிறநீர்ப்பை, முள்ளந்தண்டு ஆகியவற்றையும் மூலாதாரச் சக்கரம் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

**ஸ்வாதிஷ்டானம்**

இது பாலியல் உணர்வுகளை தூண்டும் சக்கரம். தொப்புளுக்கு சற்றுக் கீழே அமைந்திருக்கிறது. பாலியல் சக்தி இதில்தான் மையம் கொண்டிருக்கிறது. பாலியல் சக்தியைக் கொடுப்பதிலும் பெறுவதிலும் இதற்கு முக்கிய பங்கு உண்டு. ஈகோவிற்கும் இந்த சக்திதான் காரணமாக இருக்கிறது. மற்றவர்களின் உணர்ச்சிப் போக்குகளை உணர்கின்ற சக்தியும் இந்த சக்கரத்துக்கு உண்டு. ஐம்புலன்களை தாண்டி அறிகின்ற சக்தி இதிலிருந்து தான் கிடைக்கிறது. பாலியல் சுரப்பிகளின் மீது இது ஆதிக்கம் செலுத்துகிறது. உற்பத்தி உறுப்புகள், கால்கள் இதன் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

**மணிபூரகம்**

சோலார் ப்ளெக்ஸஸ் என்றும் இதற்கு ஒரு பெயருண்டு. தொப்புளுக்கு சற்று மேலே இது இருக்கிறது. உடலின் மையமாக இதனை கருதலாம். இந்த பகுதியில் இருந்துதான் உடல் இயக்கச் சக்தி உடலெங்கும் விநியோகிக்கப்படுகிறது. கட்டுக்கடங்காத உணர்ச்சியும் இங்குதான் கருக்கொள்கிறது. அதனால்தான் அதிர்ச்சியோ பய உணர்ச்சியோ ஏற்படுகின்ற போது இந்த பகுதியில் உள்ள தசைகள் இக்கமடைந்து விடுகின்றன. கணையம், என்கிற சுரப்பி இதனுடைய கட்டுப்பாட்டில்தான் செயல்படுகிறது. இரைப்பை, கல்லீரல், பித்தப்பை, மண்ணீரல், ஆகியவை இதன் கட்டுப்பாட்டில்தான் செயல்படுகின்றன.

**அனாகதம்**

இதற்கு இருதயச் சக்கரம் என்ற என்கிற பெயரும் உண்டு. மார்பின் மையத்தில், இருதயம் உள்ள பகுதியில் இது இருக்கிறது. அன்பு, பாசம், இரக்கம், சகோதரத்துவம், விசுவாசம், பக்தி, ஆகிய அனைத்து நல்லியல்புகளின் இருப்பிடமும் இதுவே ஆகும்.




தைமஸ் சுரப்பி இதன் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. இருதயம், நுரையீரல்கள், இரத்த ஓட்டம், கல்லீரல், ஆகியவையும் இதன் ஆதிக்கத்தில் இருக்கினறன.

**விசுத்தி**

இதற்கு குரல்வளைச் சக்கரம் என்றொரு பெயரும் உண்டு. தொடர்பு கொள்ளுதல், எண்ணங்களை வெளிப்படுத்துதல், படைப்பாற்றல் ஆகியவை இதன் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை. நம்முடைய புலன்களுக்கு அப்பால் அறியக்கசுடிய விடயங்களை இதன் மூலமாகத்தான் அறிகிறோம். தைராய்டு சுரப்பி இதன் கட்டுப்பாட்டில் இருக்கிறது. குரல்களை, மூச்சுக்குழல், உணவுக்குழல், கைகள் இதன் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

**ஆக்ஞா சக்கரம்**

இதை நெற்றிக்கண் சக்கரம் என்றும் சொல்வார்கள். இரண்டு புருவங்களுக்கு மத்தியில் சற்று மேலாக அமைந்திருக்கிறது. தொலை உணர்தல் *(Telepathy)* தொலை அறிதல் போன்ற சக்திகள் இதன் மூலமாகத்தான் கிடைக்கின்றன. அறிவு சங்கல்பம், மனவலிமை, ஆகியவற்றின் இருப்பிடம் இது. இதன் மூலம்தான் விடயங்களை உருவகப்படுத்திப் பார்க்க முடிகிறது. இந்தக் கண் திறக்கின்ற போது ஆன்மீகக் கண் திறப்பதாக ஞானிகள் சொல்கிறார்கள்.

பிட்யூட்டரி சுரப்பி இதன் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தண்டுவடம், மூளையின் கீழ்பகுதி, கண்கள், மூக்கு, காதுகள் ஆகிய அவயங்கள் இதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.

**சகஸ்ரஹாரம்**

இதற்கு தாமரைச் சக்கரம் என்ற பெயரும் உண்டு. இது உச்சந்தலை பகுதியில் அமைந்திருக்கிறது. இந்தச்சக்கரத்தின் மூலம்தான் ஒருவர் ஞானத்தைப் பெறமுடியும். பிரபஞ்சத்துக்கும், நமக்கும் உள்ள தொடர்பினை தெளிவு படுத்துகின்ற சக்கரம் இது. என்ன நடக்கப் போகிறது என, அல்லது எதைச் செய்ய வேண்டும் என்று முன்கூட்டியே உணர்கின்ற சக்தி இதிலிருந்துதான் கிடைக்கிறது. பீனியல் சுரப்பி இதன் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மூளையின் மேல்பகுதி இதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டது.

# பறக்கும் முப்பதும் நாலும் தெரிந்த நாற்பதும்

பாலுணர்வு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒவ்வொரு வயதிற்கு ஏற்ப மாறுபடுகிறது.டீன் ஏஜ் பருவத்தில் ஆர்வக் கோளாறால் ஏற்படும் ஆசையானது ஐம்பது வயதில் மருத்துவம் போல செயற்படுகிறது.எந்தெந்த வயதில் பாலுணர்வு எப்படி செயல்புரிகிறது என்பதை விலாவாரியாக எழுதியுள்ளார் டிரேஸி காக்ஸ்.அவருடைய செக்டஸி என்ற நூலில் கூறப்பட்டுள்ளவைகளில் இருந்து சில பகுதிகள்.



இருபது வயது என்பது டீன் ஏஜின் முடிவு.இந்த வயதில் இருக்கும் ஆண்களும் சரி,பெண்களும் சரி உறவு குறித்த கற்பனைகள்,நினைவுகளில் அதிகம் மூழ்கியிருப்பராம்.குறிப்பாக ஆண்களை விட பெண்களுக்கே கற்பனை உணர்வுகள் அதிகம் இருக்குமாம்.நிறைய கற்பனை செய்து பார்ப்பார்களாம்.

20 வயதுகளில் உள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் உடலுறவு நிலைகள் குறித்து நிறைய ஆர்வம் இருக்குமாம்.அதைப் பரீட்சித்துப் பார்க்கும் ஆர்வமும் இருக்குமாம்.2006 இல் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வின்படி 20 வயதைக் கடந்த பெண்களுக்கு சக பெண்களுடன் படுத்திருக்கும்போது ஆர்கசம் வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது 76 சதவீதம் பெண்களுக்கு இப்படி ஆர்கசம் வருமாம்.

இதுவே இந்த வயதில் ஆண்களுடன் படுக்கும் பெண்களில் 50 சதவீதம் பேருக்குத்தான் ஆர்கசம் வருமாம்.அதாவது நிஜத்தை விட நிழலில் தான் இந்த வயதுப் பெண்களுக்கு செக்ஸ் ஆசை அதிகம் இருக்கும் என்கிறார் டிரேஸி.

வாழ்க்கையைப் பற்றிய அச்சம் அகன்று வேலை,திருமணம் என்று போகும்போது வயது முப்பது.இந்த வயதில் ஆண்களும் பெண்களும் வீட்டுக்குள் வைத்திருந்த செக்ஸை வெளியிலும் கொண்டு போகத் துடிப்பார்களாம்.வித்தியாசமான சோதனைகளை செய்து பார்க்க விரும்புவார்களாம்.

இந்த வயதில் பெரும்பாலானோருக்கு குழந்தைகள் வந்துவிடும்.எனவே அவர்களின் செக்ஸ் ஆசைகள் முன்பு இருந்ததைப் போல இல்லாமல் சற்று சுருங்கிப் போயிருக்குமாம்.ஆனால் கர்ப்பமாக இருக்கும்போது கணவனும் மனைவியும் மாதத்திற்கு நான்கு முதல் ஐந்து முறை கூட செக்ஸ் வைத்துக் கொள்ளப் பிரியப்படுவார்களாம்.

30 வயதைத் தாண்டிய பெண்களில் 90 சதவீதம் பேருக்கு ஆர்கசம் அடிக்கடி வருகிறதாம்.அதேசமயம் 20 வயதுகளில் உள்ள பெண்களுக்கு இது 23 சதவீதமாகவே உள்ளதாகக் கூறியுள்ளார் டிரேஸி காக்ஸ்.

இந்த வயதுக்காரர்கள் ஒருவரை ஒருவர் வருடிக் கொடுப்பது,முத்தமிடுவது உள்ளிட்டவற்றை அதிகம் நாடுவார்களாம்.குழந்தைச் செல்வங்கள் நடுவில் வந்து விட்டதால் சிலர் வாய்ப்பு கிடைக்கும்போது பாஸ்ட் புட் ரேஞ்சுக்கு அவசர கதியில் செயற்படுவதும் உண்டாம்.அதே போல வார இறுதி நாட்களில் ஜோடியாக சுற்றுவது,கையைப் பிடித்தபடி உலா வருவது,நெருக்கமாக இருப்பது போன்றவற்றிலும் முப்பது வயதுக்காரர்களுக்கு ஆர்வம் அதிகம் இருக்குமாம்.

நாற்பதைக் கடந்த ஆண்கள் நேரடி செக்ஸ் உறவை விட படம் பார்ப்பது,செக்ஸ் சாட்டிங் செய்வது என்று வெளி வேலைகளில் அதிக ஆர்வம் காட்டுவார்களாம்.ஆனால் பெண்களுக்கோ இந்த வயதில் செக்ஸ் ஆசை அதிகரிக்குமாம்.

மாதாந்திர உறவு எண்ணிக்கை இந்த வயதினர் மத்தியில் குறைவாக இருந்தாலும் மனசுக்குள் செக்ஸ் ஆசை நிறையவே இருக்குமாம்.ஒரு தடவையாக இருந்தாலும் அதை நிறைவாக நிதானமாகச் செய்ய வேண்டும் என்று நினைப்பார்களாம்.

டிரேஸி கூறியுள்ளதெல்லாம் அவரது மேற்கத்தைய கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு தெரிவித்துள்ள கருத்துகளாகும்.ஆனால் இது நம் தேசத்திற்கு எந்த அளவிற்குப் பொருந்தி வரும் என்பது தெரியவில்லை.

# உறவைக் கெடுக்கும் மன உளைச்சல்

மன உளைச்சல் என்ற வார்த்தை இப்போது அனைவராலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் வார்த்தையாகிவிட்டது.பணியிடங்களில் ஏற்படும் நெருக்கடி உடல்ரீதியாக ஏற்படும் பிரச்சினைகள் உள்ளிட்ட காரணங்களினால் மன உளைச்சல் அல்லது மன அழுத்தம் ஏற்படுவதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.இந்த மன அழுத்தம் தாம்பத்திய உறவையும் பாதிக்கின்றது என்று தெரிவிக்கிறது அந்த ஆராய்ச்சி முடிவு.

தாம்பத்தியத்தின் போது கணவன்,மனைவி இருவரும் ஓரே மனநிலையிலே இருக்கவேண்டும்.களைப்பு மற்றும் மன அழுத்தத்தில் கணவன் இருக்கும் போது மனைவி உறவில் ஈடுபடும் மனநிலையில் இருந்தாலோ மனைவிக்கு இஷ்டமில்லாத சமயத்தில் கணவன் உறவுக்கு அழைத்தாலோ அது சிறப்பானதல்ல என்கின்றனர் நிபுணர்கள்.

மன உளைச்சலுக்கு காரணமான ஓமோன் அட்ரீனலின் சுரப்பியில் சுரக்கிறது.இது விரைவாக செயல்பட்டு மூளையில் சுரக்கும் இனப்பெருக்க ஓமோனை தடை செய்கிறது.அதுமட்டுமல்லாமல் இனப்பெருக்கத்திற்கு முட்டுக்கட்டை போடும் ஓமோனையும் சுரக்கச் செய்வதாகக் கூறி அதிர்ச்சியடைய வைக்கிறது அந்த ஆராய்ச்சி.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள்தான் இதனை கண்டுபிடித்துள்ளனர்.மனஅழுத்தம் மூலம் சுரக்கும் இனப்பெருக்கத்தடை ஓமோன்,பீட்யூட்டரி சுரப்பியில் தாக்கத்தை ஏற்படுத்தி ஆணிடம் சுரக்கும் டெஸ்ரோஸ்



டிரான் மற்றும் பெண்ணின் ஓவரிகளில் சுரக்கும் ஈஸ்ரோஜன் அளவினையும் கட்டுப்படுத்துகிறது.இதன் விளைவாக விந்தணுக்களின் எண்ணிக்கை குறைகிறது.அண்டம் வெளியிடுதல் பாதிப்படைகிறது.இனப்பெருக்க ஈடுபாடும் குறைந்து போகிறது.இதனால் கருத்தரிப்பதற்கான சிகிச்சைக்கு உள்ளாகுபவர்களுக்கு மன உளைச்சல் அதிகரிக்கிறது.

2000 மாவது ஆண்டில்தான் இந்த இனப்பெருக்கத்தடை ஓமோன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.பறவைகளில் மட்டுமே காணப்பட்ட இந்த ஓமோன் தற்போது பாலூட்டிகளிடமும் மனிதர்களிடமும் சுரப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அடைத்துவைத்து வளர்க்கப்படும் மிருகங்களுக்குக்கூட மன உளைச்சல் ஏற்பட்டு அவற்றின் இனப்பெருக்கம் குறையும் வாய்ப்பு உள்ளது.

மனஉளைச்சல் ஏற்படும் சமயங்களில் இனப்பெருக்கச் செயல்களில் ஈடுபடுவது பயனற்றது என்று இந்த ஆய்வாளர்களில் ஒருவர் கருத்து தெரிவிக்கிறார்.

இது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல ஏனெனில் வறுமையினால் ஏற்படும் மனஉளைச்சலுக்கு மருந்தாகத்தான் இனப்பெருக்கச் செயல்களில் ஈடுபட்டு மக்கள் தொகையை அதிகரிக்கிறார்கள் என்று மக்கள் தொகைப் பெருக்கத்தை ஆராயும் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

திருமணமான புது தம்பதிகளை ஹனிமூன் அனுப்பி வைப்பதே இருவரும் வேறு எந்த சூழ்நிலையையும் யோசிக்காமல் மனம் மகிழ ஒரே சிந்தனையில் புணர்ச்சி கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில்தான்.

உறவுகொள்வதற்கு முன் மேற்கொள்ளப்படும் கிளர்ச்சி தூண்டல் மிகவும் முக்கிய பங்காற்றுகிறது.எனவே புணர்ச்சியின் போது அவசரத்தை கடைப்பிடித்தல் தேவையற்றது.தவிர திருமணமாகி ஒரு சில ஆண்டுகளுக்குப் பின் பல்வேறு காரணங்களால் இரு பாலாருக்குமே தாம்பத்திய உறவில் நாட்டம் விட்டுப்போவது சகஜம்தான்.அதுபோன்ற நிலையில் குறிப்பிட்ட இடைவெளியில் அவரவர் சூழ்நிலைக்கேற்ப அவ்வப்போது உறவில் ஈடுபடுவது மனதில் உற்சாகத்தை நீடிக்கச் செய்யும்.



# அக்கம் பக்கம்

## பயத்தால் பறிபோன பணம்

சொப்ட்வேர் என்ஜினியரான அவருக்கு 40 வயது தான் ஆகியிருந்தது. ஆனால் வேலைப் பதற்றத்தில் ஐம்பது வயது மதிக்கத்தக்க தோற்றத்தில் காணப்பட்டார். இரண்டுநாட்களாய் அவரை ஒருவித சோர்வு ஆக்கிரமித்திருந்தது. ஏதோ அசதி என்று நினைத்தவருக்கு முன்றாம் நாள் இடதுபக்க தோள்பட்டை வலி வந்து பயமுறுத்தியது. தோள் பட்டை வலி மெதுவாக கையின் புஜப்பகுதிக்கு பரவ, இம்முறை வலியின் தாக்கம் அதிகமானது. கை குடைச்சல் எடுக்கத் தொடங்கிவிட்டது.

பயந்து போனவர் தன் நண்பருக்கு போன் எடுத்து விடயம் சொன்னார். அவரோ இடது பக்க கை தோள்பட்டையில் வலி எடுத்தாலே அதை இதய நோயின் அறிகுறியாகத் தான் சொல்வார்கள். இதயமும் மார்பின் இடதுபுறம் தானே இருக்கிறது. அதனால் உடனடியாக டாக்டரைப் பார் என்று பேச்சிலேயே இவர்மீது பயத்தை அள்ளித்தெளித்தார்.

இந்தப் பயத்தில் அவர் டாக்டரைப் பார்க்கப்போன போது இரவு 11 மணி. அந்த ஆஸ்பத்திரி டாக்டர் இவரது பயத்தை தன் மனதில் குறித்துக் கொண்டு அதற்கு தக்கபடி அதிரடியாய் செயல்படத் தொடங்கினார். ஆஸ்பத்திரி ஐ.சி.யூ. பிரிவில் அவரை அனுமதித்தார். இதயத் துடிப்பு சரிபார்க்கப்பட்டது. சில கருவிகள் அவர் மீது இணைக்கப்பட்டது. மருந்து, மாத்திரைகள் செலுத்தப்பட்டது. அடுத்த சில நிமிடங்களில் அவர் இருந்த ஐ.சி.யூ. அறை பரபரப்பானது. இதற்குள் விடயம் தெரிந்து அவரது குடும்பமும் நட்பு வட்டாரமும் வந்து ஆஸ்பத்திரியை அடைத்துக் கொண்டது.

மூன்று நாள் கடந்த நிலையில் ஐ.சி.யூ.வில் இருந்து விடுவித்து தனியறைக்குக் கொண்டு வந்தார்கள். மூன்று நாள் ஐ.சி.யூ. சிகிச்சைக்கு மட்டும் ஒரு சில இலட்சம் ரூபாபில் போட்டிருந்தார்கள்.

இதன் பிறகு அந்த ஆஸ்பத்திரியில் உள்ள பிரபல எலும்பு நோய் சிகிச்சை நிபுணர் முன்னால் கொண்டு போய் அவரை நிறுத்தினார்கள். பரிசோதித்த அவர் 'இந்த வலியெல்லாம் இப்போ சகஜம். ஏடா கூடமா கையைத் தூக்கியிருக்கீங்க... அதனால் தோள்பட்டை மூட்டுப்பகுதி இணைப்பு விலகி சதைச் சிதைவு ஏற்பட்டிருக்கு. இதுக்கு மாத்திரையே போதுமே' என்றிருக்கிறார்.

இதைக்கேட்டதும் உள்ளூர அதிர்ந்து போனவர், அதை வெளிக்காட்டாமல் அன்றே டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப் புறப்பட்டார். அப்போது அந்த ஆஸ்பத்திரியின் ஊழியர் ஒருவர் தன் நண்பரிடம் இப்படி கிசுகிசுக்க, அது அவர் காதிலும் விழுந்தது. அந்த ஊழியர் சொன்னது இது தான். 'இப்பல்லாம் இடதுபக்க கைவலி,, கழுத்துவலின்னு வர்றவங்களை இதயத்தில் பாதிப்புன்னு சொல்லி உடனடியா ஐ.சி.யூ.வில் சேர்த்து பில்லைப் போட்டு நீட்டுறாங்க. வர்றவங்களும் உயிர் பயத்துல டாக்டர் நீட்டுற பில்லை கட்டிட்டு போய்க்கிட்டிருக்காங்க. ஒரு மாதத்திலே 35 பேரை இப்படி அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அவசியமே இல்லாமல் தள்ளியிருக்கிறார்கள். இதேல்லாம் எங்கே போய் முடியுமோ?

தோள் பட்டை, கைவலி இதெல்லாம் வர்றவங்க பதற்றப்படாம நல்ல மருத்துவமனையில் செக் பண்ணிக்கிட்டா பணத்துக்கும் பாதுகாப்பு உயிர் பயமும் இல்லே. இது விடயத்துல உயிர்பயத்தை மையமாக வெச்சி சம்பாதிக்கிற ஒருசில ஆஸ்பத்திரிகள் உங்க வீட்டு பக்கத்தில் கூட இருக்கலாம்...!

## அவுஸ்திரேலியாவின் ஆசை



உலகிலேயே மிகப்பெரிய டெலஸ்கோப் ஒன்றை அமைக்க அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது. இதில் பங்கேற்குமாறு இந்திய விஞ்ஞானிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் பூனேவில் இருக்கும் ஜெயின்ட் மெட்ரோவேவ் ரேடியோ டெலஸ்கோப்பைப் பயன்படுத்த அடிக்கடி இந்தியா செல்கின்றனர். இந்நிலையில் உலகின் மிகப்பெரிய டெலஸ்கோப்பை உருவாக்க அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது. இது குறித்து அவுஸ்திரேலிய அறிவியல் மற்றும் ஆராய்ச்சித்துறை அமைச்சர் கிம் கார் கூறியதாவது;

'ஸ்கொயர் கிலோமீற்றர் அரே என்ற உலகின் மிகப் பெரிய டெலஸ்கோப்பை உருவாக்கும் திட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இந்திய விஞ்ஞானிகளை அழைக்கின்றோம். தற்போதுள்ள டெலஸ்கோப்புகளை விட இது 10 ஆயிரம் மடங்கு அதிக செயற்றிறன் கொண்டதாக இருக்கும். இது விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கு பேருதவியாக இருக்கும்.

இந்தத் திட்டத்திற்கு அவுஸ்ரேலிய அரசு 40.2 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கியுள்ளது. இந்தப் புதிய திட்டத்தில் நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் ஏற்கனவே இணைந்துள்ளன. 2.1 பில்லியன் டொலர் செலவாகும் இந்த டெலஸ்கோப்பை உருவாக்கும் பணியில் உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகள் ஈடுபடுவர்' என்றார்.

## இலக்கிய சுவை...

# ஓவியம் புகையுண்டது; காவியம் எழில் கொண்டது!

முனைவர் கு.சடகோபன்

சீதையோ பேரழகுப் பெட்டகம்.

அழகெல்லாம் ஒருங்கு திரண்டு அவளிடம் சங்கமமாகிப் பேரழகியாகத் திகழ்கிறாள். இப்பேரழகியைக் கண்ட மன்மதன் அவளைச் சித்திரத்தில் தீட்டிக்கொள்ள விரும்பினான். அவனோ அழகுக் கலைக்குத் தலைவன். ஓவியம் தீட்டுவதில் வல்லவன்.

சீதையைச் சித்திரத்தில் தீட்ட வேண்டுமென்ற ஆவல் கொண்ட மன்மதன் திரைச்சீலையைத் தொங்கவிட்டான். தன் எண்ணத்தை நிறைவேற்ற பல வண்ண மூலிகைகளை அமுதத்தில் கரைத்து பல்வேறு வண்ணங்களை உருவாக்கி அதைப் பல கிண்ணங்களில் தேக்கி வைத்துக்கொண்டான்.

முதலில் திருவடிகளில் தொடங்குவோமே என நினைத்து சீதையின் சிவந்த திருவடிகளை திரைச்சீலையில் தீட்டினான். பாதங்கள் நன்றாக அமைந்துவிட்டன என்றே எண்ணினான். ஆனால், சீதையின் திருவடிகளோடு தான் வரைந்த பாதங்களை ஒப்பிட்டுப் பார்த்தான். தான் வரைந்த பாதங்களைவிட அப்பேரணங்கின் பாதங்கள் அழகாக இருந்தன.சினம் கொண்டு திரைச்சீலையை எடுத்து வீசினான்.

மீண்டும் புதியதொரு திரைச்சீலையை மாட்டி வரையத் தொடங்கினான். இம்முறை திருமுக மண்டலத்தில் இருந்து வரையத் தொடங்கினான். இம்முறையும் அவன் தோல்வியைத் தழுவினான். திரைச்சீலையைக் கிழித்தெறிந்தான். முயற்சி தொடர்ந்தது.ஆனால், அவனால் சீதையின் அழகை சித்திரத்தில் முழுமையாகத் தீட்ட முடியவில்லை. ஓவியக்கலையில் துறைபோகிய வித்தகனாகிய மன்மதனோ,சீதையை சித்திரத்தில் தீட்ட முடியாமல் திகைத்தான்.

தன் காவிய நாயகியின் எழிலார்ந்த தோற்றத்தை மன்மதனாலும் தீட்ட முடியாதென்பதை 'மன்மதற்கும் எழுத ஒண்ணாச் சீதை' என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார் கம்பர். பாடல் வருமாறு:

**'ஆதரித்து அமுதில்கோல் தோய்த்து அவயவம் அமைக்கும் தன்மை**
**யாது எனத் திகைக்கும் அல்லால் மதனற்கும் எழுத ஒண்ணாச்**
**சீதையைத் தருதலாலே திருமகள் இருந்த செய்ய**
**போது எனப் பொலிந்து தோன்றும் பொன்மதில் மிதிலைப்புகார்'**
**(கம்ப. 489-மி.கா.ப)**

திருமகள் உறையும் செந்தாமரையின் நிறத்தை ஒத்த பொன் மதில் சூழ்ந்த மிதிலை மாநகரினுள் மாமுனி விசுவாமித்திரனும் ராமனும் இலக்குவனும் நுழைந்தார்கள் எனப் பாடல் முடிகிறது.

சித்திரம் கை பழக்கம் அல்லவா? வரைந்து வரைந்து தோற்ற மன்மதன் ஒருநாள் சீதையின் உருவத்தைச் சித்திரத்தில் தீட்டிவிட்டான். மன்மதன் வரைந்த ஓவியம் எப்படியோ மிதிலை அரண்மனை மடைப்பள்ளிச் சுவரில் மாட்டிக்கொண்டது. விறகு எரிய எரிய புகை படியப் படிய அந்த ஓவியம் மங்கத் தொடங்கியது.ஓவியம் புகை உண்டுவிட்டது. புகை கொண்டுவிட்டது.

மிதிலைப் பொன்னாகிய மைதிலியை இராவணன் சிறையெடுத்து அசோகவனத்தில் வைத்துவிட்டான். தினம் தினம் கோதாவரி நதியில் தன் நாயகன் இராமனுடன் புனலாடி மகிழ்ந்த சீதை மாற்றான் சிறையில் நீரோட்டம் துறந்து வாடினாள். தான் உடுத்தி வந்த ஓர் ஆடையை அன்றி வேறு மாற்றுத் துகில் புனையாமல் தவம் செய்தாள்.அவள் உடம்போ தூசி படர்ந்து நிறம் மங்கியது.மிதிலை அரண்மனை மடைப்பள்ளிச் சுவரில் மன்மதன் வரைந்த சீதையின் ஓவியம் புகையுண்டதுபோல் அசோகவனத்தில் சீதை காட்சியளித்தாள் என்கிறார் கம்பர்.

**'ஆவிஅம் துகில் புனைவது ஒன்று அன்றி வேறு அறியாள்**
**தூவி அன்னம் மென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்;**
**தேவு தெள்கடல் அமிழ்து கொண்டு அனங்கவேள் செய்த**
**ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள்'**

ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தினளாக அவள் இருந்தபோது அவளுடைய உடலழகு, குணவழகை வென்று ஒளிவிட்டு மிளிர்ந்தது. புகையுண்ட ஓவியமாக அவள் காட்சியமளிக்கும்போது குணவழகு விஞ்சி உடலழகை வென்று காட்சியளிக்கிறது. ஓவியத்து எழுத ஒண்ணாச் சீதையாக மிளிர்ந்தபோதும் புகையுண்ட ஓவியமாக அவள் திகழும்போது சீதை ஒளிர்கிறாள் என்கிறார் கம்பர்.

**'புகையுண்ட ஓவிய எழிலைக் கண்டுணர்ந்த அனுமன்**

**மாசுண்ட மணி அனாள் வயங்கு வெங்கதிர்**
**தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்**
**காசுண்ட கூந்தலாள் கற்பும் காதலும்**
**ஏசுண்டது இல்லையால் அறத்துக்கு ஈறு உண்டோ?'**

என்று வியந்தோதுகிறான். சொல்லின் செல்வனின் சொற்களுக்கு மேலான சொல் உண்டோ?சீதையின் ஓவியம் புகையுண்டாலும் கம்பனின் காவியம் எழில் கொண்டுவிட்டதே...

# மிகப் பெரிய அருங்காட்சியகம்



உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகம் வாஷிங்டனில் இருக்கிறது. இதன் பெயர் ஸ்மித்ஸோனியன் இன்ஸ்டிட்டியூஷன்ஸ் நெஷனல் மியூசியம் ஒவ் நேச்சுரல் ஹிஸ்டோரி. 1950 முதல் உலகம் முழுவதும் பயணம் செய்தனர். இந்த மியூசியத்தின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள். இவர்கள் இதற்காகப் பல இடங்களில் தோண்டி ஆயிரத்திற்கும் மேற்பட்ட முக்கியமான எலும்புக்கூடுகளைச் சேகரித்தனர். மனித இன வரலாற்றை முழுக்க ஆராய்வதற்காகவே இந்த ஆராய்ச்சி நடந்தது. இந்த ஆராய்ச்சியில் சிறப்பம்சம் ஒன்று உண்டு. சேகரிக்கப்பட்ட எல்லா மண்டையோடுகளிலும் மற்ற உறுப்புகளிலும் சில ஓட்டைகளும் அவற்றிற்குப் பக்கத்தில் அறுவை சிகிச்சை செய்த திகதிகளும் குறிக்கப்பட்டுள்ளன.




## மரத்துக்கும் மழைக்கும் என்ன தொடர்பு?



மழை பெய்தால் மரங்கள் நிறைய வளரும். மரங்கள் நிறயை வளர்ந்தால் மழை பெய்யும். இப்படியே ஒரு சுழற்சி தொடர்ந்து நடைபெறுவதுண்டு. அடர்த்தியாக மரங்கள் இருந்தால் அதன் சுற்றுப்புறத்தில் வெப்பநிலை குறையும். ஈரம் அதிகமாக இருக்கும். இது வான்மண்டலத்தில் காற்றோட்டத்தைப் பாதித்து நீர் ஆவியாகி அது மறுபடியும் நீர்த்துளியாகி மழை பெய்ய உதவி செய்கிறது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 95

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | * | * | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | * | 18 | 19 | 20 | * |
| * | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | * | 28 | 29 | 30 |

**இடமிருந்து வலம்**

1. உபவாசம், விரதம்
5. வதந்தி, உண்மையற்ற தகவல் (குழம்பியுள்ளது)
11. பாடகி சுவர்ணலதாவுக்கு விருதைப் பெற்றுக் கொடுத்த திரைப்படம்
18. மண்ணாலான தாளவாத்தியம் (திரும்பியுள்ளது)
21. வெற்றிலை, பாக்கை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)
26. வீட்டில் வளர்க்கும் மிருகம் (திரும்பியுள்ளது)
28. ஒரு மொழியிலுள்ள ஆழ்ந்த அறிவு (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. குறிக்கோள், எதிர்பார்ப்பு
2. பசுவின் இளம்பராயம் (குழம்பியுள்ளது)
3. நூல் (குழம்பியுள்ளது)
4. மன்னார் மாவட்டத்திலுள்ள ஒரு ஊர் (குழம்பியுள்ளது)
8. வைரசால் ஏற்படும் ஒரு நோய் (குழம்பியுள்ளது)
9. கருணைக் கிழங்கை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)

21 சம்மதம், அழகு என்றும் பொருள்படும் (தலைகீழ்)

25. மாமிசம் (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப்போட்டி - 93 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. திருக்குறள் | 1. திரிகடுகம |
| 7 . வரி | 2 . வருமான வரி |
| 9. சருகு | 4 . குரு |
| 12. கவலை | 5 . குறளி |
| 15. வாளி | 6. பள்ளிவாசல் |
| 17 . மாடு | 19. பாகல் |
| 21. கரிசல் | 23 . சல |
| 26. பரிபாலனம் | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**ஆர்.பிரியதர்ஷன் சர்மா ,**

**ஏழுமுக காளி கோயில், களுதாவளை, ரத்தோட்டை வீதி, மாத்தளை.**

### பாராட்டுப் பெறுவோர்

01. எம்.எப்.ஏ.அஸீம்
இல.123/16 சமகி மாவத்தை,
புத்தளம்.

02. கு.மனோரஞ்சித மலர்
இல.3 கண்டி வீதி,
திருகோணமலை.

03. கே.அரசேஸ்வரன்
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

04. அ.அ.சுரேஷ்குமார்
இல.23/10 பீ பாடசாலை வீதி,
ஜெயந்தி புரம், மட்டக்களப்பு.

05. எம்.பி. முகைதீன்
இல.352, மத்ரஸா வீதி,
பெரியநீலாவணை

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15**
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

## தன்னை மறந்த ஆராய்ச்சி

பொதுவாக ஆராய்ச்சியில் ஈடுபடும் விஞ்ஞானிகள் தம்மை மறந்துவிடுவதுண்டு. ஜேர்மனியில் பிறந்த கணித மேதை, கார்ல் பிரெட்ரிக் காஸ். இவரும் அதற்கு விதிவிலக்கல்ல. இவர் புள்ளியியல் கொள்கையில் புதிய விதிகளைக் கண்டறிந்தவர். இதுவே தற்போது காஸியன் கோட்டம் என்று அழைக்கப்படுகிறது. தோராய மதிப்பீட்டில் துல்லியம் கூட்டி பிழையை நீக்கும் கணிப்பியல் முறைகளை வகுத்து இருக்கிறார். ஒரு சமயம் இவர் புவிப்பரப்பின் இரு புள்ளிகளுக்கு இடையே உள்ள குறைந்த தொலைவைக் கண்டுபிடிக்கும் விதமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவரது வேலைக்காரன் அவர் இருக்கும் அறையின் உள்ளே வேகமாக ஓடிவந்தான். அவருடைய அன்பான மனைவி சாகும் தறுவாயில் இருப்பதாக பதைபதைப்புடன் கூறினான். ஆனால், காஸோ சர்வசாதாரணமாக 'நான் வேலையை முடிக்கும் வரை அவளை காத்திருக்கச் சொல்' என் சொல்லி வேலைக்காரனை அனுப்பினார்.

## தெரிந்துகொள்ளுங்கள்

★ சர்வதேச உணவுப்பொருள் எது?
முட்டைக்கோஸ்

★ 'அபிஸ் மாலிபெரா' என்பது எந்தப் பூச்சியின் அறிவியல் பெயர்?
தேனீ

★ 'பொன்தோல் போர்த்திய பூமி' என்றழைக்கப்படும் நாடு எது?
அவுஸ்திரேலியா

★ அழும் அதிசய சுவர் எந்த நாட்டில் உள்ளது?
ஜெருசலேம்

★ நமது தேசியக் கொடியில் உள்ள சக்கரம் உணர்த்துவது என்ன?
தர்மம்

★ உலகில் அதிகளவு சிலை யாருக்கு வடிக்கப் பட்டது?
லெனின்

# பிள்ளைகள் தவறான வழி செல்ல யார் காரணம்?



மனித சமுதாயத்தின் அடிப்படை 'குடும்பம்' என்று சமூகவியலாளர்கள் கூறுகின்றனர். இத்தகு குடும்பம் செவ்வனே அமைந்து விளங்குவதற்கு அதன் கண் இரண்டு சக்கரங்கள் போன்று திகழும்

தந்தை–தாய் என்போர் மிக்க பொறுப்புணர்ச்சியுடன் கடனாற்றல் வேண்டும்.

மேலும், குடும்ப விளக்கு பிரகாசமாக எரிவதற்கு அன்பு எனும் எண்ணெய் ஊற்றப்பட்டு பாசம் எனும் திரி தூண்டப்பட்டு இருக்க வேண்டும். தவிர, காதல் மற்றும் நட்பு, அஹிம்சை, பக்தி, விட்டுக் கொடுப்பு, தியாகம்,பொறுமை,தன்னடக்கம் முதலான பண்பியல் மலர்களும் அங்கே பூத்துக் குலுங்க வேண்டும். இத்தகு மலர்கள் ஆரோக்கியமாக வளர்வதற்கு அறிவு– புரிந்துணர்வு எனும் நீரும் பசளையும் இடப்பட வேண்டும்.

ஆனால், இயந்திரமயமாகி விட்ட இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் இவையாவும் சாத்தியம் தானா? என்ற ஐயநிலை தோன்றுகின்றது. நின்று–நிதானித்துச் செயற்படவே 'நேரம்' போதாது என்று கூறி 'பணம்' மட்டுமே வாழ்வில் மகிழ்ச்சி தரும் ஒன்று என நினைத்து இன்றைய ஆணும்–பெண்ணும் [தந்தை–தாய்] அதற்காகவே ஆலாய்ப் பறக்கின்றனர்.

இந்நிலை நகரப் புறங்களில் மட்டுமன்றிக் கிராமப் புறங்களிலும் அன்றாடம் காணும் ஒரு காட்சியாக மாறிவிட்டது. 'பொருளாதாரத்தில் பொருள் தான் தாரமென்று இருவர் உழைத்தாலே இந்நாளில் பசிதீரும்' என்ற பாடல் வரிகளுக்கேற்ப இன்றைய எகிறிவரும் பொருள்தார உயர்வுக்குக் குடும்பச் சக்கரங்கள் இரண்டுமே உழைக்கினும் தம் பிள்ளைச் செல்வங்களை உயரிய முறையில் பேணி வளர்க்கின்ற பாரிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கின்றதல்லவா?

பிள்ளைகளை நல்ல பாடசாலையில் சேர்த்தோம், அவர்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் வாங்கிக் கொடுத்தோம், பிரத்தியேக வகுப்புகளும் ஒழுங்கமைத்துக் கொடுத்தோம் என்றெல்லாம் நகரப் புறங்களில் வாழும் வசதிபடைத்த பெற்றோர்கள் எண்ணிக்கொண்டிருக்க, மாறாக கிராமப் புறங்களில் வாழ்கின்ற பெற்றோர், பிள்ளைகள் பாடசாலை செல்கின்றனர் தானே [வறுமைக்கோடு] எனும் அலட்சியப் போக்கில் இருந்து வருகின்றனர்.

இவ்விரு புறங்களில் வாழ்கின்ற பெற்றோர்களும் சிந்திப்பது வருங்காலத் தலைவர்களான பிள்ளைகளின் ஆரோக்கிய வாழ்வுக்கு ஏற்றதல்ல. இத்தகு பெற்றோர்களின் அலட்சிய–பொறுப்பற்ற போக்கினால் தான் இன்று நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் மலைபோல் வளர்ந்து வருகின்றன. இவற்றைத் தடுக்க வேண்டுமாயின் 'பிள்ளை வளர்ப்பு' தொடர்பான கற்பித்தலை பெற்றோர்களுக்கும் புகட்ட வேண்டும்.

இதேவேளை, இன்றைய மாணவிகளில் அநேகமானோர் தமது எதிர்காலத்தையே [தகாத நடத்தைகளால்]தொலைத்து விடும் அளவிற்கு நிலைமை மோசமாகிக் கொண்டு வருகின்றது. இன்னும் சில பாடசாலைகளில் அதிபர் மற்றும் ஆசிரியர்களாலேயே இந்த மாணவிகள் பாதிக்கப்படும் கொடுமைகளும் அரங்கேறுகின்றன. மாணவிகளின் நிலைமை தமது ஆசான்களாலும் நண்பர்களாலும் பாழாகிக் கொண்டு செல்ல மாணவர்களின் [ஆண்கள்] நிலைமையோ தலைசுற்ற வைக்கின்றது. போதைப் பொருள், புகைப்பொருள் பாவனைக்கு அடிமைப்படும் இவர்கள் நாளாவட்டத்தில் ஆபாசப்படங்கள் [நீலப்படம்] முதலானவற்றையும் பார்க்கின்றனர். அத்தகைய சூழல் நாட்டில் குறிப்பாக போருக்குப் பின்னர் தானாகவே மலர்ந்திருக்கின்றது.

மேலும், கிராமப் புறங்களில் வாழ்கின்ற சிறார்கள் பாடசாலை செல்கின்றோம் என்று பெற்றோரை ஏய்த்துவிட்டு தமது அயல் வீடுகளில் ஒளிபரப்பப்படுகின்ற தொடர் நாடகங்கள் மற்றும் சினித்திரைகளைப் பார்வையிடச் செல்லும் அதேவேளை பாடசாலை முடிவுறும் நேரத்திற்கு வீடுகளுக்குச் செல்கின்றனர். அத்துடன் மாலை நேரங்களில் விளையாடப் போகின்றோம் என்று பொய் சொல்லிவிட்டு அந்தப் பாடசாலை நேரத்தில் செய்யும் தொழிலையே தொடர்கின்றனர்.இது அவர்களின் வாடிக்கை நிகழ்வாக மாறிவிட்ட ஒன்று.

சிறுவர்களை, தம் பிள்ளைகளை வழிநடத்த வேண்டிய பெற்றோர்கள் அசிரத்தையாகவுள்ள அதேநேரம் மாணவர்களே செல்லும் வழி தெரியாது போகிற போக்கில் செல்கின்ற துர்ப்பாக்கிய நிலையொன்று உருவாகி வருகின்றது.இது இவ்வாறிருக்க போரில் பெற்றோரைப் பறிகொடுத்த பிள்ளைகளின் பயணமும் பாரிய இடர் மிகுந்த சவால்மிக்க ஒன்றாகவே காணப்படுகின்றது.

எனவே, சமுதாயத்தின் அடிப்படை என்று சொல்லப்படுகின்ற தற்காலக் குடும்பங்களில் பெற்றோர்கள் விழித்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிலையை காலம் அவர்களுக்கு உணர்த்தி நிற்கும் அதேவேளை, பிள்ளைகள் அல்லாதோர் இந்தப் போரினால் அநாதைகளாக்கப்பட்ட சிறார்களைத் தத்தெடுத்துக் கொள்ளின் இருவர்க்குமே மிகப்பெரும் பேறு கிட்டும் என்ற செய்தியையும் அது சொல்லி நிற்கிறது.

நல்லோர்கள் எல்லாம் விழித்துக் கொண்டால், எங்கள் சமுதாயம் நன்றே பிழைத்துக் கொள்ளும் என்ற எண்ணமும் கருத்திற்கேற்ப இன்றே–நன்றே சமூக அக்கறை தாரர் செயற்படத் தயாரா?

எஸ்.ரூபனா

# ரஜினிக்காக எதையும் செய்வேன் - தீபிகா



எனக்கு என்னதான் கால்ஷீட் பிரச்சினை இருந்தாலும் ரஜினி சார் படத்துக்கு மட்டும் எப்போது அழைத்தாலும் வருவேன். எந்தப் படத்தின் கால்ஷீட்டையும் அட்ஜஸ்ட் செய்து தருவேன். ரஜினி இந்திய சினிமாவுக்கு எப்போதுமே ஸ்பெஷல்தான் என்றார் தீபிகா படுகோன்.

ரஜினி மூன்று வேடங்களில் நடிக்கும் ராணாவில் அவருக்கு ஜோடியாக நடிப்பவர் தீபிகா படுகோன். இந்தப் படத்தில் ரஜினியின் மற்ற இரு வேடங்களுக்கு நாயகிகள் யார் என்பது குறித்து இன்னும் அறிவிக்கவில்லை. ஆனால் தீபிகா மட்டும் அறிவிக்கப்பட்டு விட்டார். ரஜினி உடல்நிலை காரணமாக படத்தின் படப்பிடிப்பு இரத்தாகி கால்ஷீட் பிரச்சினை வந்த பிறகும் கூட தீபிகா பொறுமையிழக்கவில்லை.

ரஜினி எப்போது குணமாகி வருகிறாரோ அதுவரை காத்திருப்பேன் என்று கூறியிருந்தார். இப்போது மீண்டும் அக்டோபரில் படப்பிடிப்பு ஆரம்பமாகும் நிலையில், அவரை படப்பிடிப்புக்கு வருமாறு அழைத்துள்ளார் ரஜினி. இது குறித்து தீபிகா கூறுகையில்;

'ராணா படப்பிடிப்பு குறித்து கே.எஸ்.ரவிக்குமார் தகவல் அனுப்பியுள்ளார். எனக்கு இதை அவர்கள் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. காரணம் இது ரஜினி படம். அவர் எப்போது அழைத்தாலும் ராணா படப்பிடிப்புக்கு வரத் தயாராக இருக்கிறேன். என்க்காக அவர்களை காத்திருக்க வைக்கவும் மாட்டேன். ராணாவுக்காக எந்தப் படத்தின் கால்ஷீட்டையும் அட்ஜஸ்ட் செய்து தருவேன். ரஜினி இந்திய சினிமாவுக்கு எப்போதுமே ஸ்பெஷல்தான்' என்று கூறினார். படப்பிடிப்புத் தொடங்கும் முன், ரஜினிக்காகவும் ராணா படம் சிறப்பாக வரவும் திருப்பதி கோவிலில் வழிபாடு நடத்த முடிவு செய்துள்ளாராம் தீபிகா.

## Saturday சினிமா




## பிரபுதேவாவுக்கு தடையான காளி

பிரபுதேவா படப்பிடிப்புக்கு குறுக்கே நிற்கிறது கொல்கத்தா காளி. வெடி என்ற பெயரில் பிரபுதேவா இயக்கிவரும் புதிய படத்தில் விஷால்–சமீராரெட்டி ஜோடி நடிக்கிறது. இப்படத்தின் படப்பிடிப்பிற்காக சமீபத்தில் கொல்கத்தா சென்றிருக்கிறது படக்குழு. விஷால்–சமீரா உள்ளிட்ட நட்சத்திரங்களுடன் காளி தேவி கோயில் முன்பு இறங்கிய பிரபுதேவாவுக்கு அதிர்ச்சியளிக்கும் வகையில் படப்பிடிப்பு நடத்த அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் முன்கூட்டியே கடிதம் கொடுத்து அந்தக் காளி கோயில் காட்சி ரொம்ப முக்கியமானது என்பதால் விடாப்பிடியாக அங்கு படப்பிடிப்பு நடத்தியே தீர வேண்டும் என்று கோயில் நிர்வாகத்துடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார். ஆனாலும் காளி மனசு கரையவே இல்லையாம். ஒரு நாள் முழுவதும் நட்சத்திர பட்டாளத்துடன் காளிதேவி கோயில் முன்பு காத்துக் கிடந்ததுதான் மிச்சம். இப்போது அந்தக் காட்சியை வேறு எங்கு எடுப்பது என்கிற ஆலோசனையில் மூழ்கியிருக்கிறாராம் பிரபுதேவா.

அஜித்தின் ஆத்மார்த்த ரசிகர் சிம்பு. அவரைப் போலவே படத்தில் நடித்திருக்கிறார். உடை அணிந்திருக்கிறார். தல வாழ்க என கோஷமிட்டிருக்கிறார். தொழிலிலும் இந்தப் பக்தி தொடர்கிறது. மங்காத்தா படப்பிடிப்பு தொடங்கும் போதே படத்தின் மூடு எத்தகையது என்பதை வெளிப்படுத்தும் விதமாக அஜித்தை வைத்து டீஸர் ஒன்றை வெளியிட்டார் வெங்கட்பிரபு. இதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. மங்காத்தா போலவே தனது வேட்டை மன்னனுக்கும் டீஸர் ஒன்றை வெளியிட்டுள்ளார் சிம்பு. வேட்டை மன்னன் கேங்ஸ்டர் படம் என்பதை சொல்லாமல் சொல்கிறது டீஸர். இணையத்தில் இது செம ஹிட்.

அழகிய தமிழ் மகனுக்குப் பிறகு விஜய் படம் எதற்கும் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்ததில்லை. இந்த நீண்ட இடைவெளியை சரி செய்ய வருகிறது யோஹன் முதல் அத்தியாயம். கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கும் படம் யோஹன். படத்தின் படப்பிடிப்பு அடுத்த வருடம் தொடங்குகிறது. கௌதமின் ஃபோட்டோன் கதாஸ் படத்தைத் தயாரிக்கிறது. இசை யார் என்பதை முதலில் வெளியிடாதவர்கள் இப்போது விளம்பரம் வழியாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். கௌதமின் விண்ணைத் தாண்டி வருவாயா படத்துக்குப் பிறகு கௌதம், ரஹ்மான் கூட்டணி வலுப்பட்டிருக்கிறது. பாடல்களை எடுக்கும் விதத்தில் ரஹ்மானை கௌதம் ரொம்பவே இம்ப்ரஸ் செய்திருக்கிறார். இதன் காரணமாக கௌதம் கேட்டதும் விஜய் படத்துக்கு இசையமைக்க ரஹ்மான் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

உறுமி – பிருத்விராஜ், பிரபுதேவா, ஜெனிலியா




தீபிகா படுகோனே

**வே**ட்டை படத்தில் சமீரா ரெட்டி நடிக்கிறார். ஆனால் அமலா பாலுக்கு அக்காவாக நடிக்கிறாராம். இது வரை நாம் பார்த்து வந்த நவநாகரிக சமீரா, இப்படத்தில் தாவணி, புடவையும் அணிகிறாராம்.

**ஒ**ரே நேரத்தில் மூன்று படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார் சோனியா அகர்வால். இப்படி ஒரு திடீர் அதிர்ஷ்டம் அவருக்கு அடிக்கும் என்பதை அவரே நினைத்திருக்கப் போவதில்லை. அத்தனையும் நாயகிக்கு முக்கியத்துவம் தரும் கதைகள்.



7ஆம் அறிவு – சூர்யா

## வித்யா பாலன் இரகசிய திருமணம்

**பொ**லிவூட் நடிகை வித்யாபாலன் இரகசியமாக யு.டி.வி. நிறுவனத்தின் சித்தார்த் ராய் கபூரை இரகசியமாகத் திருமணம் செய்துள்ளதாக பொலிவூடே பரபரக்கிறது. பொலிவூட்டில் முன்னணி நடிகைகளில் ஒருவரான வித்யாபாலன் தற்போது தி.டர்ட்டி பிக்சர்ஸ் என்ற படத்தில் மறைந்த தென்னிந்திய கவர்ச்சி நடிகை சில்க் ஸ்மிதாவாக நடித்து வருகிறார். இந்நிலையில் வித்யாபாலனுக்கும் யு.டி.வி.நிறுவனத்தின் சித்தார்த் ராய் கபூருக்கும் திருமணம் நடந்து விட்டதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது. கடந்த சில மாதங்களாகவே இருவரும் ஒன்றாக ஊர் சுற்றி வருவதாகவும் நெருங்கிப் பழகி வருவதாகவும் நிறைய கிசுகிசுக்கள் வந்தன. ஆனால், வழக்கமாக நடிகைகள் விடும் வசனமான எங்களுக்குள் ஒன்றும் இல்லை. நட்பாகத்தான் பழகி வருகிறோம் என்று கூறி வந்தார் வித்யா. ஆனால் இப்போது இருவருக்கும் கல்யாணமே முடிந்து விட்டதாக உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த வாரம் இருவரும் இரகசியத் திருமணம் செய்ததாகவும் கல்யாணத்தை முடித்துக் கொண்டு தேனிலவுப் பயணத்தையும் தொடங்கியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## ஆடைக்குறைப்பு அவசியமில்லை – அசின்

**பொ**லிவூட்டில் வதந்திகள், பரபரப்புகளைக் கிளப்பியே ஒருவரால் தாக்குப் பிடிக்க முடியும் என்ற புதிய வித்தையை அறிமுகம் செய்த பெருமை அசினுக்கு உண்டு. கஜினிக்குப் பிறகு சொல்லிக் கொள்ளும் அளவுக்கு படங்கள் இல்லாமல் இருந்த அசினுக்கு பெரிதாகக் கைகொடுத்தது சல்மான்கானின் சமீபத்தில் வெளியான ரெடி. இப்போது அமிதாப், அஜய் தேவ்கன் படங்களிலும் நடிக்கிறாராம் அசின். இது குறித்து அவர் கூறுகையில்;

‘ரெடி’ மிகப் பெரிய வெற்றி பெற்றுள்ளது. ஆடையைக் குறைக்காமலேயே என்னால் ரசிகர்களைக் கவர முடியும் என்பதற்கு இன்னும் ஒரு உதாரணம் இந்தப் படம். என்னைப்பற்றி தொடர்ந்து வதந்திகள் பரவுவதாகக் கூறுகிறார்கள். இதை நானே உருவாக்குவதாகவும் சிலர் எழுதியுள்ளனர். இந்தி திரையுலகில் இதெல்லாம் சகஜம் என்று எனக்குத் தெரியும். அதனால் எதையும் நான் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. இன்னொரு முக்கியமான விடயம். நான் படங்களில் தலையிட்டு நாயகனை மாற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதாகக் கூறுவது. நான் அப்படி ஒருபோதும் சொன்னதில்லை. அந்த நிலையிலும் இல்லை.



ஷாருக்கானுடன் நடிப்பதாக நான் சொல்லவில்லை. அவரது ‘2 ஸ்டேட்ஸ்’ படம் ஆரம்பக் கட்டத்தில் தான் உள்ளது. வேறு இரண்டு படங்களுக்கான வேலைகளில் பிசியாக இருக்கிறார். இப்போதைக்கு அபிஷேக் பச்சனுடனும் அஜய்தேவ்கனுடனும் நடிக்கிறேன்’ என்றார்.

நீல்நிதின் முகேஷுடனான காதலை எஸ்.எம்.எஸ்.அனுப்பி நீங்கள் முறித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறதே? என்று கேட்டபோது கடுப்பான அசின், ‘அதுபற்றி பேசி என் நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை. என்னைப் பற்றி இதுபோல் தவறான வதந்திகள் பரப்பப்படுகின்றன’ என்றார்.








# அழிவின் நினைவு நாள்

## ஆகஸ்ட் 6-9, 1945



**1945** ஆம் ஆண்டு அன்று அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ருமேன் இங்கிலாந்து பிரதமர் சேர்ச்சிலிடம் மிகவும் பரவசத்துடன் தங்கள் கைவசம் உள்ள ஒப்பற்ற அணு ஆயுதத்தைப் பற்றிக் கூற...அதைக் கேட்ட சேர்ச்சில் பன்மடங்கு மகிழ்ச்சியுடன் ஓ! ரஷ்யாவை ஒழித்துக்கட்ட இது ஒன்று போதும் என்று ஆனந்தக் கூத்தாடினார்!

அமெரிக்க ஜனாதிபதி ட்ருமேனைத் தவிர, இந்த அணு குண்டை உபயோகிப்பதில் வேறு எவருக்கும் விருப்பம் இல்லை. ஆயினும் அவர் மிகவும் பிடிவாதமாக இந்த யுத்தம் சீக்கிரமாக முடிய வேண்டும். நம் இராணுவத்தில் அதிகம் உயிர்ச் சேதம் இல்லாமல் இருக்க வேண்டுமானால், இந்த அணுகுண்டை உபயோகித்தே தீர வேண்டும் என்று அடித்துக் கூறிவிட்டார். அவரின் உத்தரவு ஆசியுடன் எனாலோ கே என்ற ஒரு ஊழிகாலத்து அரக்கன் பதினான்கு அடி நீளமும் ஐந்து அடி அகலமும் பத்தாயிரம் பவுண்டு கனமுள்ள தி லிட்டில்போய் என்று செல்லமாக அழைக்கப்பட்ட அந்தக் குழந்தையை தன்னுள் சுமந்து கொண்டு டோக்கியோவிலிருந்து இரண்டாயிரத்து ஐம்பது கிலோமீற்றர் தூரத்திலுள்ள டினியன் என்ற தீவிலிருந்து புறப்பட்டான்.

அவனின் இலக்கு ஹிரோஷிமா. ஏனெனில் அங்குதான் மிகப்பெரிய அளவில் ஆயுதக் கிடங்குகள், போர்த் தளபாடங்கள் அனைத்துமே குவிக்கப்பட்டிருந்தன. காலை 8.30 மணிக்கு தன் இலக்கில் இருக்க வேண்டும். ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் இருக்கக்கூடாது. நீலவானத்தில் சூரியனின் கிரகணங்கள் மட்டுமே பளீரென இருக்க வேண்டும். அப்போது தான் அங்கே நடக்கவிருக்கும் வீரதீர சாகசத்தை துல்லியமாகப் படமெடுத்து உலக மக்களை வியக்கச் செய்யலாம் என்று மிக நீண்ட பட்டியலுடனும் தங்கள் ஜனாதிபதி ட்ருமேனின் ஆசியுடன் புறப்பட்டான்.

கண் இமைக்கும் நேரத்தில் பன்மடங்கு சூரிய ஒளியுடன் மிகப் பிரகாசமாக ஹிரோஷிமா தீக்கங்குகளில் குளித்துக் கொண்டிருக்க ஐந்து மீற்றர் சுற்றளவுள்ள அடர்த்தியான கருமேகம் ஆகாயத்தில் சூழ்ந்து கொண்டது. இந்தக் குண்டு மழைக்கு ஆளான இரண்டு இலட்சத்துக்கும் மேலான மக்கள் அப்படியே கருகிவிட தீயில் உருகும் உடலோடு கதறக்கூட ஜீவனற்ற மிஞ்சிய மக்கள் ஆஸ்பத்திரிகளை நோக்கி ஓட.... ஓ! அங்கே எரியும் உடலோடு கண்,கை,கால்கள் சிதைந்த நிலையில் உள்ள கூட்டத்தைப் பார்த்த டாக்டர்களே இனி உங்களுக்கு வாழ்க்கையே கிடையாது. திரும்பி விடுங்கள்! என்று கூறினார்களாம்.

நாங்கள் சரணடைந்து விடுகிறோம் என்று ஜப்பான் மன்னர் ஹிரோஹிட்டோ அபாயக்குரல் எழுப்புவார் என்று இந்தக் கர்ம வீரர்கள் எதிர்பார்க்க அது நடக்கவில்லை என்று அறிந்ததும் பின்னர் அந்த லிட்டில்போய் நகாஸாகி மேல் பறந்து விளையாடி ஊரையும் மக்களையும் பொசுக்கி அழித்துக் கோரப்படுத்தி இந்தத் தலைமுறைகள் மட்டுமல்ல இனிவரும் இரண்டு,மூன்று தலைமுறைகளிலும் கூட உங்களால் நிமிர முடியாது,உட்கார முடியாது, எழுந்து நிற்க கை,கால்கள் கிடையாது. பார்க்கக் கண்கள் கிடையாது,கேட்க செவிகள் கிடையாது,தோல் சுருங்கி, உடல் சுருங்கி இனி என்றும் நீங்கள் அனைவருமே நடைபிணங்கள் தான் என்று எக்காளமிட்டான்.

ஓ! அந்த லிட்டில் போயின் குரூர சூளுரைகள் அனைத்தும் இப்ப என்னவாயிற்று? சில வருட இடைவெளிக்குப் பின் இப்போது அன்று அழிக்கப்பட்ட அந்த ஜப்பானில் மிகக் கம்பீரமாக பளிங்கு மனிதர்கள்,செல்வத்தில் விருந்தோம்பல் நீந்துகின்றனர். புத்தம் புதிய கண்டுபிடிப்புகள்,கார் வகைகள்,போன் வகைகள்,எலக்ட்ரானிக் சாதனைகள், நகர்கள் எங்கும் வானளாவிய கட்டிடங்கள்,வெளிநாட்டவரை அசத்தும் ஹோட்டல்கள், இன்னும் எத்தனை எத்தனையோ... இன்று அமெரிக்காவிற்கு இக்குட்டிநாடு ஒரு மிகப்பெரிய சவால் என்றால் மிகையாகாது.

த இன்ரநெஷனல் மிலிட்டரி ட்ரைபூனல் என்ற பதினொரு நபர்களைக் கொண்ட அமைப்பு. போர்க் கைதிகளை விசாரணை செய்து அவர்களுக்குரிய தண்டனையை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டது. ஜப்பானிய ஜெனரல் டோஜோவையும் அவருடைய கூட்டாளிகளையும் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட இக்குழுவும் இந்தியாவைச் சேர்ந்த ராதா வினோத் பால் என்ற நீதிபதியும் இருந்தார். இவர் துணிந்து ஜப்பானியர்கள் குற்றவாளிகளே அல்லர். யுத்தத்தில் தாங்கள் வென்றுவிட்டோம் என்ற ஒரே காரணத்திற்காகத் தோற்றவர்களை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விசாரணை செய்வது எப்படி நியாயமாகும்? அதிர்ஷ்ட தேவதை ஜெயித்தவர்களுடன் கைகுலுக்கிக் கொண்டு விட்டதால் அவர்கள் குற்றமற்றவர்கள் என்று கூறுவது என்ன நியாயம் என்று கூறிவிட்டார்

சமீபத்தில் த ஜப்பான் ரைம்ஸ் என்ற பத்திரிகையில் வெளியான ஒரு குறிப்பு இது. போர்க் கால விசாரணை நடந்து கொண்டிருந்த சமயம் நீதிபதி ராதா வினோத் பால் வீட்டில் சமையல் காரராக இருந்தவன் ஒரு இளம் மலையாள சிறுவன். அவன் ஜப்பானிலே தங்கி ஒரு சிறிய ஹோட்டலை ஆரம்பிக்க அது தற்போது மிகப்பெரிய ஹோட்டலாக மாறிவிட்டது. தங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கிய தங்களின் மதிப்பிற்குரிய அந்த இந்திய நீதிபதியின் நினைவாக அந்த மலையாள சிறுவனின் [இன்று வயதாகிவிட்ட] ஹோட்டலுக்குச் சென்று உணவருந்துவதை தங்களின் இனிமையான கடமையாக எண்ணுகின்றனர் ஜப்பானியர்கள்.

ஐன்ஸ்டின் என்ற விஞ்ஞானி 'நாங்கள் வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்து எங்கள் ஆராய்ச்சிகளின் அரிய கண்டுபிடிப்புகள் அனைத்தும் இப்படி கொடூரமான செயல்களுக்கெல்லாம் பயன்படுத்துவதைக் காணும்போது என்மனம் வெதும்புகிறது. என் அடுத்த பிறவியில் நான் மறுபடியும் ஒரு விஞ்ஞானியாகப் பிறக்க விரும்பவில்லை. ஒரு சாதாரண குழாய் பொருத்துநராகவே பிறக்க விரும்புகிறேன்' என்றாராம்.

66 வருடங்களுக்கு முன் தீயில் முக்குளித்து முற்றிலும் சாம்பலாகிப்போன அந்த ஜப்பான் நாடுதான் இன்று அந்த சாம்பல் குவியலிலிருந்து ஒரு பீனிக்ஸ் பறவையாகத் துள்ளி எழுந்து தன் இறக்கைகளை ஆகாயமளவு விரித்து உலகமே வியக்கும் வண்ணம் கொடிகட்டிப் பறக்கிறது. இது எப்படி? இது எப்படி சாத்தியம்? என்று உலகமே வியக்கிறது என்பதே சத்தியம்.

இந்தப் போர் எங்களுக்குக் கற்றுக் கொடுத்த பாடம் இனி நாங்கள் ஒருபோதும் யுத்தத்திற்காகப் பணம் செலவழிக்கமாட்டோம். மாறாக அந்தப் பணத்தை எங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக மட்டுமே செலவழிப்போம் என்று தங்களுக்கே உரிய புன்னகையுடன் ஒவ்வொரு ஜப்பானியரும் சொல்கின்றனர்.

இவ்வார மெயிலில் இவர்...

# சரா ஆன் எலிசெபத்



உலகமே ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் காத்திருந்த பிரிட்டிஷ் அரச குடும்பத் திருமணம் கடந்த ஏப்ரலில் மிகவும் பிரமாண்டமாகவும் சர்வதேச ஊடகங்களின் மிகையான வெளிப்படுத்தல்களுடனும் நடைபெற்று முடிந்தது.

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்-கேற் மிடில்ரன் திருமணமே இவ்வாறான ஆர்ப்பாட்டங்களுடன் நடைபெற்று முடிந்திருந்தாலும் இத்தம்பதிகள் குறித்த செய்திகள் இன்னமும் ஊடகங்கள் மூலமாக பிரசுரிக்கப்படுகின்றது.

எந்தளவிற்கு ஒரு அரச திருமணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமோ அதற்கு மேலதிகமாக வில்லியம்-கேற் மிடில்ரன் திருமணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்களுடன் பிரிட்டிஷ் அரச குடும்பத் திருமணம் நடைபெற்று முடிந்திருக்கும் நிலையில் அதே அரச குடும்பத்தைச் சேர்ந்த மற்றுமொரு திருமணம் அண்மையில் நிறைவேறியுள்ளது.

இத்திருமணம் குறித்து சர்வதேச ஊடகங்களும் சரி பிரிட்டனின் உள்ளூர் ஊடகங்களும் சரி அவ்வளவு முக்கியத்துவத்தினை வழங்கியிருக்கவில்லை.

வில்லியம்-கேற் மிடில்ரன் திருமணத்தினை எடுத்துக் கொண்டால் வில்லியமுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்திலும் கேற் மிடில்ரனுக்கும் அவரது சகோதரி பிப்பா மிடில்ரனுக்கும் வழங்கிய முக்கியத்துவம் அதிகம்.

இவ்வாறான நிலையில் இளவரசி ஆன் மற்றும் அவரது முதலாவது கணவன் கப்டன் மார்க் பிலிப்ஸ் தம்பதிகளின் மகள் சரா ஆன் எலிசபெத்தின் திருமணம் நடைபெற்று முடிந்துள்ளது.

ஆனால் இத்திருமணம் குறித்து எத்தனை பேர் அறிந்துள்ளனர் என்பதே கேள்விக் குறியாக உள்ளது. அதேவேளை சர்வதேச ஊடகங்கள் சராவினதும் அவரது காதலரும் ரக்பி வீரருமான மைக் தின்டாவதும் திருமணத்தைப் பாரபட்சமாகக் கையாண்டுள்ளதாகத்தான் கூற வேண்டும்.

இந்த இரு திருமணத்தையும் ஊடகங்கள் கையாண்ட விதம் முற்றிலும் மாறுபட்டவையாக உள்ளது.சரா ஒருபுறமிருக்க ரக்பி வீரரான தின்டாலிற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் எவ்வாறுள்ளது.

1981 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி பிறந்த சரா முடிக்குரிய வரிசையில் 13 ஆவது இடத்தில் உள்ளார்.கோடன்ஸ்ரோனில் தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்த அவர் பாடசாலைக் காலத்தில் ஹொக்கி,மெய்வல்லுனர் போட்டிகள்,ஜிம்னாஸ்டிக் துறைகளில் ஆர்வம் கொண்டிருந்தார்.

பின்னர் எக்ஸ்ரர் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சித்துறையில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்திருந்தார்.

கல்வி நடவடிக்கையின் பின்னர் அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் 3 மாதம் தங்கிய சரா குதிரை ஓட்டத்தில் ஆர்வம் காட்டியிருந்தார்.

2003 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ரக்பி உலகக் கிண்ணப்போட்டியின் போது ரக்பி வீரர் தின்டாலுடன் சராவுக்கு நட்பு ஆரம்பமாகி காதலாகி கடந்த ஜூலை 30 ஆம் திகதி ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற திருமணம் வரை சென்றுள்ளது.

அரச குடும்பத்தில் திருமணம் செய்து கொள்வதன் மூலம் கிடைக்கும் உயரிய அந்தஸ்தை அக்குடும்பத்தைச் சாராதவர்கள் என்றுமே தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

இளவரசி டயானாவுக்கு எவ்வாறான பாரபட்சங்கள் இழைக்கப்பட்டதென்பதை உலகம் மறந்து விடவில்லை.

இவ்வாறான நிலையில் திருமண பந்தத்தில் இணைந்திருக்கும் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் புதிய தம்பதிகளை நாம் வாழ்த்துவோம்.

யோ.நிமல்ராஜ்










சிரிக்க...
சிந்திக்க....!!



# ஒரு நாளைக்கு 50 ஆயிரம் மின்னல்கள்



ஒரு நாளைக்கு 40 ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரம் தடவைகள் மின்னல்கள் பூமியைத் தாக்குகின்றன.

ஒரு பெரிய மின்சார நிலையம் தரக்கூடிய மின்சாரத்தை அதாவது பத்து இலட்சம் கிலோவோட் மின்சாரத்தை ஒரு மின்னல் பெற்றிருக்கிறது.

மின்னல்கள் பூமியில் இருந்து 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் மீற்றர் உயரத்தில் உருவாகி வருகின்றன. மின்னலின் வால்முனைக்கு 'கரோனா ஸ்டீமர்' என்று பெயர்.

மலை மீதோ அல்லது சமவெளியிலோ உள்ள மக்கள் கூட்டம் மின்னலை வெகுவாகக் கவர்கிறது.

ஒருவரைத் தாக்கிய மின்னல் அத்தோடு நில்லாமல் அருகே இருப்பவரையும் தாக்கும். அதுபோன்ற நேரங்களில் தங்களைக் காத்துக்கொள்ள விரும்புவோர், தமது உடைகள், உடலில் உலோகத் துண்டுகள் (ஹேர்பின், பக்கிள், ஸ்டீல் பேனா போன்றவை) இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும்போது மரங்களின் அடியில் நிற்கக்கூடாது. ஈர மரங்கள் மின்னலை வரவேற்கும். வேறு வழியில்லை என்கிறபோது முடிந்தளவு அடி மரத்தை விட்டு விலகி நிற்க வேண்டும்.

வீடுகள்,கட்டிடங்கள்,கார்கள், ரயில்கள் ஆகியவற்றின் உள்ளே இருப்பது பாதுகாப்பாகும். 333 மீற்றர் உயரமுள்ள டோக்கியோ டவர், சக்தி வாய்ந்த மின்னல்களால் பலமுறை தாக்கப்பட்டது.மின்னல் பூமியில் ஒரு பொருளைத் தொட்டவுடன் கண்ணைப் பறிக்கும் ஒளிப்பந்து உண்டாகும்.




## நெருப்பு எரிவது எப்படி?

நெருப்பு என்பது இரசாயன மாற்றத்தின் விளைவாக இரு பொருட்கள் வெளியிடும் ஒளியும் வெப்பமுமே ஆகும்.

இரசாயன மாற்றங்கள் பல வகைப்படும். அவற்றில் ஒன்று ஏதேனும் ஓர் எரிபொருளுடன் ஒட்சிசன் சேர்ந்து நெருப்பை உண்டாக்குவது. நெருப்பை உண்டாக்குவதற்கு மூன்று பொருட்கள் தேவை. ஒட்சிசன்,எரிபொருள், வெப்பம் மூன்றும் சேர்ந்து நெருப்பு உண்டாகிறது.

மரக்கட்டையை எரிக்கும்போது அதிலிருந்து உண்டாகும் எரிவாயு காற்றில் உள்ள ஒட்சிசனுடன் உடனே கலந்துவிடுகிறது. எரிபொருளும் ஒட்சிசனும் இருந்தால் மட்டும் போதாது.

உதாரணமாக கரி அல்லது விறகு, பேப்பர் போன்றவற்றைச் சூடாக்க வேண்டும். அதற்கு ஒரு தீக்குச்சி தேவை. பேப்பர் சூடானதும் அதனுடன் ஒட்சிசன் எளிதாகக் கலக்கிறது.

ஒவ்வொரு எரிபொருளும் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையை அடைந்ததும்தான் எரிய ஆரம்பிக்கிறது. அதற்கு வெப்பம் தூண்டப்படும் புள்ளி என்று பெயர்.

ஒரு மரக்கட்டையில் எரியும் தீக்குச்சியை இட்டால் மரம் தானாக எரியாது. ஏனெனில் முழு மரக்கட்டையில் ஒட்சிசன் எந்த இரசாயன மாற்றத்தையும் விளைவிக்காது. ஆனால், நெருப்பை பற்றவைத்தால் மரக்கட்டையின் மேற்பரப்புக் கருகி ஒருவித வாயு வெளியாகுறது. அந்த வாயுவுடன் ஒட்சிசன் கலப்பதால் இரசாயன மாற்றம் ஏற்பட்டு மரக்கட்டை எரிகிறது. வெப்பம் அதிகரிக்கும் போது காற்று,ஒட்சிசன்,மரக்கட்டை எரியும் வாயு எல்லாம் தூண்டிவிடப்பட்டு நெருப்புக் கொளுந்துவிட்டு எரியும்.



# மன அமைதி... நிம்மதி!

இன்றைய அவசர உலகில் பெருகிவரும் பரபரப்பு, பதட்டம் அதனால் ஏற்படும் மனக்கவலைகள், ஏமாற்றங்கள், எதிர்பார்ப்புகள் போன்றவை எல்லாம் அதிகமான மனபாரத்தை ஏற்படுத்தி இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்கின்றன.அப்படி ஏற்படும் மன இறுக்கத்தை தளர்த்தி மன அமைதி பெறும் வழிகளை இங்கே பார்ப்போம்.

முதலாவதாக உடல் மற்றும் உள்ளத்தைத் தளர்த்தி ஆழமாக சுவாசிக்க வேண்டும்.மூச்சை உள்வாங்கி பின்னர் மெதுவாக வெளியிடுவதும் முக்கியமானது.உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மனதையும் உடலையும் தளர்த்தி ஓய்வு எடுப்பது அவசியம்.

அதேபோல் நாம் எப்போதும் செய்யும் வேலையை விட்டு விட்டு மாறுபட்ட நமக்குப் பிடித்தமான ஏதாவது ஒரு வேலையை செய்வதும் அல்லது அதைப் பற்றி தெரிந்து கொள்வதும் மனதை நிம்மதியாக்கும். தோட்ட வேலை செய்தல், புத்தகம் அல்லது பத்திரிகை வாசித்தல், விளையாடுதல் ஆகியவற்றை பொழுது போக்காக செய்தால் உடல் புத்துணர்வாகி மனம் அமைதி பெறும்.



தினமும் குறிப்பிட்ட நேரம் யோகாசனம் செய்தால் இரத்த அழுத்தம் குறைந்து மன அழுத்தமும் குறைகிறது.ஆனால் யோகாசனம் செய்பவர்களுக்கு எவ்வித கெட்ட பழக்கமும் இருக்கக் கூடாது.

மது வகைகள், புகைப் பிடித்தல், புகையிலை பழக்கம் ஆகியவற்றை தொடவே கூடாது.அதே போல் உணவு முறையில் கட்டுப்பாடு இருந்தால் மட்டுமே இரத்த அழுத்தம் சீராகும்.

யோகாசனம் செய்வதற்கு முன்பு மனதில் அச்சம், பீதி, படபடப்பு, மன இறுக்கம் போன்றவை மனதுக்குள் வைத்திருக்கக் கூடாது.யோகாசனத்தை காலையில் செய்வது அவசியம்.அப்படி தொடர்ந்து யோகாசனம் செய்து வந்தால் கண்டிப்பாக மனம் நிம்மதி அடையும்.

Saturday மெயில் சிறுகதை

# வேலைக்காரி

விசுவநாதன்



சம்பளப் பணத்தை கையில் வாங்கிக் கொண்டு தயங்கிய குரலில் ஏதோ சொல்ல முயன்றாள் வேணி. 'என்ன வேணி... என்னவோ சொல்லணும் போல ... தயங்கி நிற்கிறே...' என்று கேட்டாள் வீட்டுக்காரம்மாள் மீனாட்சி. 'நான்...நான் இன்னையோட வேலையிலேருந்து நின்னுக்கிறேம்மா...' என்றாள் வேணி. துணுக்குற்ற மீனாட்சி, 'என்ன வேணி... ஏன் இப்படி திடீர்னு முடிவு பண்ணிட்டே...' என்று கேட்டாள். 'வீட்டிலே என்னோட கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ண ஆரம்பிச்சுட்டாங்க... அதனாலதாம்மா'. கல்யாணம் என்றதும் முகம் மலர்ந்தாள். 'அப்படின்னா சரி சந்தோசமாக போய்ட்டு வா...'

டி.வி. பார்ப்பதில் மூழ்கிப்போயிருந்த கணவர் கந்தசாமியிடம் போன மீனாட்சி, 'என்னங்க! வேலைக்காரி வேணி வேலையிலிருந்து நின்னுக்கிறேன்னு சொல்லிட்டுப் போய்ட்டா...' என்றாள்.

'அப்படியா... எதுக்காம்?' சுவாரசியம் இல்லாமல் கேட்டார் கந்தசாமி. 'கல்யாணமாம்'. ஒற்றை வரியில் பதில் சொன்னாள் மீனாட்சி. மார்க்கெட்டில் காய்கறிகளை வாங்கிக் கொண்டு திரும்பிய மீனாட்சியை அவள் தோழி நீலாவதி சந்தித்தாள். 'உன் கணவரும் அந்த வேலைக்கார வேணியும் ரெண்டு தட்வை இதே கோயில்ல ஒரு மூலையிலே நின்னு பேசிக்கிட்டு இருந்ததை பார்த்தேன். என்ன கோளாறுன்னு தெரியலே.கவனமா இருந்துக்கோ'

மீனாட்சிக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் அதை வெளிப்படுத்தாமல் 'சரி பார்த்துக்கிறேன்' என்றபடி வீட்டுக்கு விரைந்தாள்.

வீட்டுக்கு வந்தாள். வீடு பூட்டப்பட்டிருந்தது. அதிர்ந்தவளிடம் பக்கத்து வீட்டுப் பங்கஜம் வந்து சாவியை மீனாட்சி கையில் கொடுத்தாள். 'உன் கணவர் அவங்க பெற்றோரைப் பார்க்க அவசரமாக போறாராம்.நாளைக்கு வந்துடறேன்னு சொல்லச் சொன்னாரு...' என்று சொல்லிட்டுச் சென்றாள்.

தன்னிடம் முழு விபரம் சொல்லாமல் திடீரென்று தன் பெற்றோரைப் பார்க்க போயிருக்கிறாரே.... ஒருவேளை இந்தப் பயணத்திற்கும் வேலையில் இருந்து நின்ற வேணியின் கல்யாணத்திற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ? உள்ளூர கலக்கம் எட்டிப்பார்த்தது.

மறுநாள் காலை பத்து மணிக்கு கந்தசாமி வீடு வந்து சேர்ந்தார். மீனாட்சி அவரிடம் திடீர் பயணம் குறித்து எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை.குளித்து உடைமாற்றிக்கொண்டு கணவர் அலுவலகம் புறப்படும் வரை அமைதியாகவே இருந்தாள்.

அவர் போனதும் உடனே அதிரடி நடவடிக்கையில் இறங்கினாள்.

ஒரு ஆட்டோ பிடித்து அவசரமாய் அம்மன் கோவிலுக்கு விரைந்தாள். கோயிலில் நல்ல கூட்டம். சற்றுத் தள்ளி பிரகாரத்தின் வடக்கு மூலையில் அருகருகே பேசிக்கொண்டிருந்த கந்தசாமியும் வேணியும் அவள் கண்ணில் சட்டென்று பட்டார்கள். படபடக்கும் நெஞ்சைக் கட்டுப்படுத்தியவள், கல்தூண் மறைவில் நின்றபடி அவர்கள் பேசுவதை கவனித்தாள்.

'வேணி.. நீ என் தம்பி சுரேஷைக் காதலிப்பதைப் பற்றி என்கிட்ட சொன்னப்ப எனக்கு கொஞ்சம் அதிர்ச்சிதான். நீ என் வீட்டில் வேலை செய்கிறாய் என்றதும் உன்னை கல்யாணம் செய்து கொள்ள முடியாதுன்னு சொல்லிட்டான். நீ அதிர்ச்சியடைந்து என் கிட்டே சொன்னே. நான் இதுவிடயமா என் பெற்றோரிடம் பேசியதும்,அவங்க தம்பியைக் கண்டிச்சாங்க. வேணியைத் தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு சொன்னாங்க. அவனும் ஒத்துக்கிட்டான். நாளை காலை என் பெற்றோர் வர்றாங்க. அவங்களோட நானும்,என் மனைவி மீனாட்சியும் வருவோம். அப்போதே திருமணத்துக்கு நாள் குறிக்கிறோம். சரியா?' கணவர் சொன்னதைக் கேட்டதும் தெளிவான மனதோடு வீட்டை நோக்கி நடந்தாள் மீனாட்சி.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
**Saturday மெயில் சிறுகதை**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15**
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## மரபுகளும் மாணிக்கங்களே



தயக்கத்தில் இருந்து
துணிவுக்குள் புகுந்து
சாதிப்பை நோக்கி
புறப்பட்டிருக்கும்
தோழனே!

முடக்கப்பட்டுப் போன
உன் தேடல்களில்-நீ
பழைமையெனும் மரபுகளோடு
புதியவையெனும்
புதுமைகளையும் சேரு

மரபுகள் உன்னை
ஒருபோதும் மட்டம்
தட்டாதவை
புதியவை உன்னை
ஒருபோதும்
புறந்தள்ளாது.

நிகழும் நிஜங்களை
இறந்தகாலத்து நிழல்களோடு
முடிச்சிட்டு

புதுமைகள் புரியும்
புதுயுகத்தில் நீயும்
புதுமைகள் நிகழ்த்த

புதுமை நீரினில்
விருச்சம் வளர்க்கும்
புது மைந்தனாகி

வெற்றி மாளிகையில்
சிம்மாசனம் இடும்
இளவரசனாகலாம்!

பரகடுவ
கே.எம்.சம்ஸ்

## சுதந்திரம்

பிறப்பதும் ஒரேவழி;
வாழ்வதும் ஒரே பூமி;
மடிந்து மறைவதும்
ஒரே மண்ணில்.

பருகுவதும் ஒரே நீர்;
சுவாசிப்பதும் ஒரே காற்று;
இரத்தமும் ஒரே நிறம்;
பிரிவினை மட்டும்
ஏனோ பலநூறு.

மதத்தால் வேறுபாடு ;
இனத்தால் வேறுபாடு ;
சாதியால் வேறுபாடு ;
மொழியால் வேறுபாடு .

அடம்பன் கொடியாய்
ஒன்றுபட்டு
பெற்றெடுத்த நம்
தேச சுதந்திரம் ;

இனத்துறல்
விசிறி அடித்த
யுத்த புயலால்;
பிரித்துக் கொட்டிய
நெல்லி மூட்டையாய்;
சிதறுண்டு போனதே.

வைர விழா கடந்த
சுதந்திர நன்னாளில்;
வேற்றுமை மறந்து ;
ஒருமைப்பாடு நிறைந்த
புதிய தேசத்தை ;
வளமிக்க நாட்டினை
கட்டி எழுப்ப
உறுதி பூணுவோம்.

அன்பால் பிணைவோம்;
மனித நேயத்தால் சேர்
வோம்;
ஒன்றுபட்டு உயர்வோம்.
சுதந்திர தீபம்
ஏற்றுவோம்;
சுபிட்சமாய்
வாழ்வோம்.

கற்பிட்டி வஹாப்

## ஏனோ?

கணவனை இழந்தவளை
வெற்றுக் காகிதமென
வீதியில் வீசாதீர்கள்
புல் முளைக்காத
நச்சுத் தரையென
கால் பதிக்க மறுக்காதீர்கள்
சரஸ்வதி வெள்ளைச்
சேலையில்
வெளிரெண்டிருந்தால்
அழகென்றீர்
எங்களை ஏனோ?
அவமங்களம் என்கிறீர்?

எங்களின் கண்ணீரை
நாங்கள் துடைத்துக்
கொண்டிருக்கும் போதே!
கவலையற்றவள்
என கணக்கற்றோர்
உரைக்கிறீர்
வீழ்ந்த பூக்களைக் கூட
மாலைக்கு சேர்க்கிறீர்
தவறிக் கூட எவரும்
எங்களுக்கு மீண்டும்
மாலையிட வருவதில்லை.

இலக்கியங்களில்
வரும் விதவைகளை
கண்டு மார்பு துடிக்கும்
காளையர்களே
நிகழ்காலம் ஏன்
உங்கள் கண்களுக்கு
புலப்படுவதில்லை.

பா.ரிசாந்தன்,
ஹொப்டன்.




Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15





## அந்த அழகிய காலம்

சங்கு
கொண்டோடி ஊதிப்
பழகிய சின்னக்காலம்
சிரித்துப் பந்து விளையாடிய
ஆரம்பகாலம்
சின்ன மணல் வீடு கட்டி
மகிழ்ந்த அந்தக் காலம்
சின்னச் சின்ன குறும்பு
செய்த பள்ளிக்காலம்
நட்பாய் தொடர்ந்த எம்
நடுத்தரக் காலம்
காதலில் விழுந்த டீனேஜ் காலம்
நினைத்தாலும் எத்தனை
காலம் காத்தாலும் வருமா அந்த அழகிய
காலம் அழுதாலும் புரண்டாலும்
இலவு காத்த கிளிபோல் தான் இப்பொழுது
அந்த அழகிய காலம்.

## போகிறேன் ....

உன்னை
விட்டு நான் செல்லவில்லை
உடல் பிரிந்தாலும்
உயிர் உள்ள வரை– என்
உணர்வுகள் உன்னிடம்
மட்டுமே என்னுள்
உன் நினைவுகள்
மட்டுமே ...நான்
போகிறேன்....

## வங்கக் கடல்

பிறருக்காக!
வங்கக்கடல் போல்
வாழ்வதை விட– உன்
ஒருத்திக்காய்– சிறு குட்டையாய்
வாழ்ந்திடலாம் அதை
உன் அன்பால்
வங்கக்கடல் என்ன
விரிகுடா வாக்கலாம்– உன்
அன்பு உண்டானால்...

## பழக்கதோஷம்

அந்தோ!
ஒரு தலைக் காதலன்
இறந்து கிடக்கிறான்
இருந்தும்–அவனது
கண்கள்
திறந்து கிடக்கிறது
பாவம்
காதலியின் வருகையை
எதிர்பார்த்து–பார்த்து
நின்ற பழக்க
தோஷம்...

ஜே.கதீஸ்காசி, அரியாலை.

# பேய் விளையாட்டு



நாம் இறந்த பின்னர் என்ன நடக்கிறது? எமது உடலில் இருந்து உயிர் பிரிகிறது. அது ஆவியாக மாறிச் சொர்க்கத்தை இல்லை நரகத்தை அடையும். இல்லாவிட்டால் அது பூமியில் சுற்றித் திரியும் என்பது ஐதீகம். இது எல்லாம் உண்மையா? முதலில் ஆவி எண்டு ஒன்று இருக்கா என்று கேட்டா படிச்ச ஆள் படிக்காத ஆள் தொடக்கம் அறிவுள்ள ஆள் அறிவில்லாத ஆள் வரை ஆட்டம் காணுவாங்க. ஏன்னா ஒருவகைப் பயம். ஆனா அதுக்கு எல்லாத்தையும் தாண்டி பல விஞ்ஞானிகள் ஆவி இருக்கிறதா சொல்லிற வீட்டை கமரா மூலமாகவும் வேறு சாதனங்கள் மூலமாகவும் கண்காணிச்சு இருக்காங்க. அதிலும் சில அதிசயங்கள் நடந்ததால் அவர்களுக்கு இருக்கா இல்லையா எண்டு ஒரு சரியான... இல்லாட்டி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கல எண்டு தான் சொல்ல வேண்டும்! கமராவில் தாம் படம் பிடிக்கும் போது ஆவிகள் அதில் அகப்பட்டதாகச் சொல்லும் சில படங்களை நாம் இங்கே பிரசுரித்துள்ளோம். அது ஒரு பொய்யான படம் என்று இதுவரை நிரூபணம் ஆகவில்லை என்பதுதான் அதன் சிறப்புத்தன்மை!

சமீபத்தில் எனக்கு நடந்த ஒரு விடயத்தை நான் உங்களோட பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்!

நான் நெதர்லாந்து நாட்டிற்கு மாணவர் விசாவில் சென்று படிக்கும் ஒருவன். அங்கே பகுதி நேரமாக வேலை செய்து கொண்டு படித்து வருகிறேன். நான் முதலில் வேலைக்குச் சேர்ந்த இடத்தில் என்னை 3 மாதத்தில் நிறுத்தி விட்டார்கள். வேலைதேடி அலைந்த எனக்கு ஒரு பேக்கரியில் வேலை கிடைத்தது. பாண் ரொட்டி எனப் பலவகையான பொருட்கள் அங்கே விற்கப்படும். நான் முதல் நாள் வேலைக்குச் சேர்ந்த போதே அங்கே வேலை செய்யும் வயதான பாட்டி ஒருவர், அக்கட்டிடத்தில் பேய்கள் இருப்பதாகக் கூறினார். நான் அதனை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. அவர் முகத்தில் ஒரு தீவிரத்தன்மையும் தெரியவில்லை. ஆனால் நாள் ஆக நாள் ஆக அவர் அந்த பேக்கரி இருக்கும் இடம் ஒரு சவக்காலைக்கு மேல் அமைந்துள்ளதாகவும் இரண்டாம் உலகப் போரில் இறந்தவர்கள் புதைக்கப்பட்ட இடம் அது எனவும் கதைகள் சொன்னார். அப்போது கூட என் அறிவுக்கு அவர் கூறுவது உண்மை என்று புரியவில்லை. வேலை செய்யவேணும் காசு வரவேணும் படிப்பைப் பார்க்கவேணும் என்று தான் என் மூளை சிந்தித்தது.

ஆனால், திடீரென ஒரு நாள் எம்மிடம் வந்து வழமையாகப் பாண் வாங்கும் நபர் ஒருவர், எப்படி இருக்கிறாய் பேய் தொந்தரவு ஒன்றும் இல்லையே என்று சர்வசாதாரணமாகக் கேட்டார். அப்போது தான் எனக்குப் பொறி தட்டியது. அவரிடம் மெல்ல இது உண்மையா என்று கேட்டேன். அவர் சிரித்துவிட்டார். என்னப்பா உண்மையா என்று கேட்கிறாய். இது ஊர் அறிந்த விடயம் என்றார். அது சரி நீ 6 மணிக்குப் பின்னர் இங்கே நிற்க வேண்டாம் என்று கூறிச் சென்றார். சொல்லிவைத்தது போல் அடுத்த நாள் வந்த அதே நபர் பல ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட ஒரு சவக்காலை படத்தைக் காட்டி இது தான் இப்போது நீ நிற்கும் இடம் என்றார். அப்படத்தில் எதுவும் புரியவில்லை. ஆனால் அதில் இருக்கும் ஒரு பெரிய மரம் இன்னமும் நான் வேலை செய்யும் கட்டிடத்துக்கு பக்கத்தில் மலைபோல நின்றிருந்ததைப் பார்த்து ஆடிப்போனேன். அப்ப கிழவி சொன்னது உண்மையா என அதிர்ந்து போனேன். ஆனால் ஒருநாள் கூட பேய்களை நான் பார்த்ததும் இல்லை, அதை உணர்ந்ததும் இல்லை.

ஆனால், அவைகளின் அட்டகாசங்கள் பகலிலும் ஆரம்பமானது தான் நான் வாழ்நாளில் கண்ட பெரிய அதிசயம்! இங்கே குளிர் அதிகமாக இருப்பதால் அடிக்கடி கோப்பி அல்லது ரீ குடிப்பது வழக்கம். ஒரு நாள் நான் தனியாக வேலை செய்யும் போது பின் புறத்திற்குச் சென்று கோப்பி போட்டுக் கொண்டு இருந்தேன். முடிக்கும் தறுவாயில் யாரோ முன்னர் வரும் சத்தம் கேட்டதால் கோப்பியைக் குடிக்காமல் அப்படியே விட்டுவிட்டுச் சென்று... வந்த வாடிக்கையாளருக்கு பாண் மற்றும் ரொட்டிகளை விற்றுவிட்டு திரும்பச் சென்று கோப்பியைக் குடிக்க எடுத்தால் கிளாசில் கோப்பி இல்லை! அது நிலத்தில் ஊத்தியும் இல்லை! யாரோ குடித்து முடித்தது போல கிளாஸ் காலியாக இருந்தது. ஒரு நொடி விநோதமாக இருந்தது. மறுநொடி பேயின் நினைவு வந்தது. கிழவி சொன்னது உண்மையா என என் மனம் பதபதைத்தது. என்ன செய்வது என்று தெரியாமல் தலை தெறிக்க ஓடிச்சென்று கடையின் முன் பக்கத்தில் நின்றேன். யாராவது வாடிக்கையாளர் வரமாட்டார்களா அவர்களுடன் கதைக்க முடியாதா என்று மனம் ஏங்கியது. கடையைப் பூட்டிவிட்டு வீட்டிற்குச் செல்லலாம் என நான் நினைத்தேன்!

அப்போதுதான் அங்கே மெல்ல மெல்லமாக நடந்து அந்தக் கிழவி வந்தார். நான் நடந்ததைச் சொல்ல அவர் எதுவித ஆச்சரியமும் இல்லாமல் தனது பையோடு கடைக்குச் சென்று, உடுப்பை மாற்றி சர்வதாரணமாக தனது வேலையை ஆரம்பித்தார். என்னடா பிழைப்பு இது எண்டு ஆகிப்போச்சு. மெல்ல அவரிடம் போய்... உங்களுக்குப் பயமே இல்லையா என்று கேட்டேன். அதுவரை வாயை மூடிவைத்திருந்த கிழவி சில பல விடயங்களை கக்க ஆரம்பித்தார். இங்கபாரு இது ஒரு காலத்துல சவக்காலை தான் இங்க பேய் இருக்குத்தான். ஆனால் அது நல்ல பேய் என்றார். பேயில் என்ன நல்ல பேய் கெட்ட பேய்எண்டு இருக்கு என்று நான் கேட்க, அவருக்கு கோபம் வந்து விட்டது. பேயில் எத்தனை வகை இருக்கு எண்டு உனக்குத் தெரியுமா? என்று என்னைத் திருப்பிக் கேட்டார். இல்லை என்றேன்! அப்ப அமைதியாகக் கேளு என்ற மாதிரி சொல்ல ஆரம்பித்தார். டீமன், ஓமன், போத்துகைஸ், காஸ்பர், டெவில் என்று பல தரப்பட்ட பேய் இருக்கு. இதில் மோசமான பேய் போத்துகைஸ் மற்றும் ஓமன் ஆகும் என்று சொன்னார். இதில் நல்ல பேய் காஸ்பர் என்றார்.

காஸ்பர் பேய் விளையாட்டுக் குணம் கொண்டதாம்! அதற்கு விளக்கம்வேற சொன்னார். அது ஆட்களைக் கொல்லாது கஷ்டப் படுத்தாது ஆனால், விளையாடும் என்றார். அந்த காஸ்பர் என்னும் பேய் தான் இந்தக் கட்டிடத்தில் இருக்கு என்றார். என்ன மிஞ்சி மிஞ்சிப் போனால் ரீ யைக் குடிக்கும், பேன்சில் பேனாவை நகர்த்தி வேற இடத்தில் வைக்கும். இல்லாட்டி இங்குள்ள பொருளை அங்க வைக்கும் அவ்வளவுதான் அதன் விளையாட்டு என்று அசால்டாகச் சொன்னார் கிழவி. எனக்கு மூச்சே நிற்கிறமாதிரி நெஞ்சு இறுக்கமா இருந்தது. மூச்சு எடுத்துவிடுவதே கஷ்டமாக இருந்திச்சு. என்ன செய்வது என்று தெரியவில்லை. தனியா வேலை செய்யும் ஒவ்வொரு நாளும் இதோட லூட்டி அடிக்கணுமா எண்டு நினைத்தேன். மறுநாள் வேலைக்கு வரும்போது ஒரு மாதா சிலையை எடுத்து வந்து வைத்தேன். வேலையை ஆரம்பிச்சேன். ஆனால் சற்றுநேரத்துக்குப் பின்னர் மாதா சிலையை அது அரக்கி வேறு ஒரு ராக்கில் வைத்தது. எனக்குப் பெரும் ஆச்சரியமா இருந்திச்சு. கடவுள் சிலையை அரக்கி வைக்குது என்றால் என்ன சொல்ல?

கல்லூரியில் படிக்கும் ஒரே ஒரு தமிழ் நண்பர். அவரிடம் விடயத்தைக் கூற அவர் தனது அப்பா ஒரு பூசாரி என்று சொன்னார். அப்பாவிடம் இருந்து மந்திரத்தகடு ஒன்றைத் தருவதாகக் கூறினார். சில தினங்களில் அதுவும் வந்தது. அதனைக் கட்டித் தூக்குமாறு அவர் உத்தரவு. நானும் அப்படியே செய்தேன். என்ன மாயம் 2 நாட்களாக அதனை அது ஒன்றும் செய்யவில்லை. காஸ்பர் பேயின் தொல்லை முடிந்தது என்று நினைத்தேன். ஆனால் 3 ஆம் நாள் அது மந்திரத் தகட்டையும் எடுத்து அலேக்காக பாண் வைக்கும் தட்டில் போட்டுவிட்டது. இதுக்கு மேல என்னால் முடியவில்லை! எப்படா மாதம் முடியும் சம்பளத்தை கிழவி கையில் தருவார். கிடைத்ததும் சொல்லாமல் வேலையை விட்டுவிட்டு முதலில் அந்த இடத்தில் இருந்து ஓடலாம் என நான் நினைத்தேன். அதுபோல மாதம் முடிந்ததும் சொல்லாமல் கொள்ளாமல் எனது உடுப்பு மற்ற சாமான்கள் எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு அந்த பேக்கரியை விட்டு ஓடிவந்து விட்டேன். பாக்கில் இருக்கும் எனது பழைய உடுப்புகளை தோய்க்க எடுத்தால் அதில் எல்லாம் பேனா இங்க் தெறித்து இருக்கு.

இந்த வேலையும் யார் செய்திருக்கும் என்று எனக்குத் தெரியாதா என்னா?

**ராஜு**
**(நெதர்லாந்து)**

# கூறும் காரணம் சரியில்லை






யார் நம்பர்-1 என்று முடிவெடுக்கப்படும் ஒரு டெஸ்ட் தொடருக்கு எந்தவித தயாரிப்புமின்றி களமிறங்கிவிட்டு நெருக்கமாக தொடர்களை அமைப்பதால்தான் வீரர்கள் களைப்படைந்து விடுகின்றனர். ஓய்வில்லையென்று போன்றகாரணங்களைக்கூறுவது போன்ற காரணங்களைக் கூறுவது உசிதமல்ல என்று இந்திய முன்னாள் கப்டன் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய அணித் தலைவர் எம்.எஸ்.தோனி தோல்விக்குக் காரணம் ஓய்வில்லாமலிருப்பதே என்றும் நெருக்கமாகத் தொடர்கள் அடுத்தடுத்து வருவதே என்று கூறிய சிறிது நேரத்திற்கெல்லாம் சௌரவ் கங்குலி இவ்வாறு தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கங்குலி இந்திய அணியின் உத்வேகமின்மையைக் கடுமையாகச் சாடினார்.

ஓய்வில்லை. அதி கிரிக்கெட் என்ற வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு புளித்து விட்டுப் போய்விட்டது. பிறகு ஏன் இந்தியாவுக்கு விளையாட வேண்டும்? இவ்வாறுதான் இருக்கப்போகிறது என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் டெஸ்ட் தொடரில் விளையாடித்தானே ஆகவேண்டும்.

இது ஒரு முக்கியமான டெஸ்ட் தொடர். யார் நம்பர்-1 என்பதைத் தீர்மானிக்கும் தொடர். இவ்வாறிருக்கையில் சாக்குப் போக்குகளைக்கூறக்கூடாது. நாம் சரியாக விளையாடவில்லை. அதனால் தோல்வி ஏற்பட்டது. அவ்வளவுதான். அதனை நேர்மையாக ஒப்புக் கொண்டு மேலே செல்ல வேண்டியதுதான். அதுதான் சரியான அணுகுமுறையாக இருக்கும்.

தற்போது தோல்வியைப் பின்னுக்குத் தள்ளுங்கள். உங்களுக்கு வயது 28 அல்லது 29 அல்லது 30 இருக்கலாம். வாழ்நாள் முழுவதும் நீங்கள் இந்தியாவுக்காக ஆடப்போவதில்லை. வாய்ப்புக் கிடைத்துள்ளதால் அதனை நன்றாகப் பயன்படுத்துங்கள். அணியில் நம் இடம் கையை விட்டுப் போய்விட்டால் மீண்டும் ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை. அதனை நீங்கள் எவ்வளவு விரும்பினாலும் கிடைக்கப்போவதில்லை என்பதே உண்மை.

சுரேஷ் ரெய்னா, அபினவ் முகுந்த், யுவராஜ் சிங் ஆகியோர் தங்களை சிறந்த டெஸ்ட் வீரர்களாக நிறுவ ஒரு சிறந்த வாய்ப்பு. ரெய்னாவுக்கும் யுவராஜுக்கும் நேரடிப் போட்டியுள்ளது. எப்படியும் சேவாக், கம்பீர் வந்தால் இவர்களில் ஒருவர்தான் அணியில் இடம்பெற முடியும்.

லமண் எழும்பும் பந்துகளை நன்றாக எதிர்கொள்கிறார். ஏனெனில் அவரது உத்தி அப்படி. அவர் பின்னால் சென்று ஆடக்கூடியவர். ஆனால் பந்து ஸ்விங் ஆகும்போது அவரால் முன்னங்காலைக் கொண்டு வந்து ஆட முடியவில்லை. அவர் 5 அல்லது 6 ஆம் இடத்திலேயே களமிறக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு முறை அயல்நாட்டிற்கு கிரிக்கெட் பயணம் மேற்கொள்ளும் போதும் 3 தொடக்க வீரர்களை அழைத்துச் செல்ல வேண்டும். சேவாக் காயமடைந்து விட்டார் என்பது தெரியும். ஏன் வாசிம் ஜாபரை அழைத்துச் செல்லவில்லை. அவர் என்ன தவறு செய்தார்? என்று கேள்வி எழுப்பினார் கங்குலி.

மேலும் இந்திய பின்வரிசை வீரர்கள் இங்கிலாந்து பின்வரிசை வீரர்கள் போல் விளையாடவில்லை. ஹர்பஜன் சிங்கும் சோடை போவது அணியை பின்னடைவுக்கு இட்டுச் செல்கிறது.

தற்போது இந்தியா விரைவில் எழுச்சியுற்று இன்னும் 3 நாட்களில் தொடங்கவுள்ள 3 ஆவது டெஸ்ட் போட்டிக்குத் தயாராக வேண்டும். இந்திய அணி தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் ஒன்றல்ல இரண்டல்ல என்று கூறினார் கங்குலி.



## 'ஹாட்ரிக்' காப்பியடித்துவிட்டார்'



தான் 2001 ஆம் ஆண்டு நிகழ்த்திய டெஸ்ட் ஹாட்ரிக் பாணியை இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஸ்ரூவர்ட் புரோட் கொப்பி அடித்து விட்டதாக நூதன புகாரை தெரிவித்துள்ளார் இந்திய பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்.

லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியிலும் சரி, நொட்டிங்காம் டெஸ்டிலும் சரி ஹர்பஜன் சிங்கால் இந்தியாவுக்கு எந்த உபயோகமும் இல்லை. பந்து வீச்சில் மகா மோசம் ஹர்பஜன் சிங்.

2 ஆவது டெஸ்ட் போட்டியின் 2 ஆவது இனிங்ஸில் 46 ஓட்டங்களை எடுத்தது மட்டுமே இவர் செய்த பெரிய விடயம். இந்த நிலையில் நூதனமான ஒரு புகாரைத் தெரிவித்துள்ளார் ஹர்பஜன் சிங்.

இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஸ்ரூவர்ட் புரோட் இந்தத் தொடரில் ஒரு ஹாட்ரிக் சாதனை செய்தார். தன்னைப் பார்த்து கொப்பி அடித்துத்தான் புரோட் இந்தச் சாதனையைச் செய்துவிட்டார் என்று தற்போது ஹர்பஜன் சிங் புகார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்;

2001 ஆம் ஆண்டு நான் டெஸ்ட் ஹாட்ரிக் சாதனையைச் செய்தேன். நான் அப்போது செய்த அதே பாணியை, அதே முயற்சிகளை என்னிடம் முன் அனுமதி பெறாமல் கொப்பி அடித்து விட்டார் புரோட். இது காப்புரிமைச் சட்டத்தின் கீழ் விதி மீறலாகும். எனவே, புரோட் மீது வழக்குத் தொடருவது குறித்து எனது சட்டநிபுணர் குழு ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது.

இரண்டு ஹாட்ரிக் நிகழ்வுகளிலும் 2 ஆவது அவுட் எல்.பி.டபிள்யூ மூலம் வந்தது. இரண்டிலும் நான் சம்பந்தப்பட்டுள்ளேன். இது எனக்கு வேதனையாக இருக்கிறது. எனது தொழிலில் நான் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அவர் அப்பட்டமாக கொப்பி அடித்துள்ளார். இதை ஏற்க முடியாது என்றார் ஹர்பஜன் சிங்.

ஹர்பஜன் சிங் கூறுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு நிருபர் குறுக்கிட்டு, இப்படி வீணான வழக்குகளைப் போட்டு உங்களது சக்தியை வீணடிப்பதற்குப் பதில் விளையாட்டில் ஆர்வம் காட்டலாமே என்று கேட்டார்.

இதைக்கேட்டு கோபமான ஹர்பஜன் சிங், என்ன சக்தி வீணாகிவிடப் போகிறது என்று கோபத்துடன் கேட்டார்.

# முதல் சவால் ஆரம்பம்

இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 'ருவென்ரி-20' தொடர் இன்று சனிக்கிழமை கண்டி பள்ளேகல மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இரு 20 ஓவர் போட்டிகளைக் கொண்ட இந்தத் தொடர் இரு அணிகளுக்கும் மிகவும் சவாலானது. இலங்கை அணி சொந்த மண்ணில் இத் தொடரை சந்திக்கும் அதேநேரம் அவுஸ்திரேலிய அணி இளம் வீரர்களுடன் களமிறங்குகிறது.

கொழும்புக்கு வெளியே பள்ளேகலவில் இந்த இரு போட்டிகளும் நடைபெறுகின்றன. இதற்காக இரு அணிகளும் கடந்த மூன்று நாட்களாக பள்ளேகல மைதானத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டன. அவுஸ்திரேலிய அணி மாலை வேளையிலும் இலங்கை அணி இரவில் மின்னொளிலும் பயிற்சிகளை மேற்கொண்டன.

யும் மிகவும் சிறப்பாயிருப்பதாக அணித் தலைவர் திலகரட்ண டில்ஷான் கூறியுள்ளார். அதற்கேற்ப ஒவ்வொரு வீரர்களிலும் தனிக்கவனம் செலுத்தி ரட்ணாயக்க பயிற்சிகளை வழங்கி வருகிறார். சகல துறைகளிலும் அணிகளை சமநிலையில் வைத்திருந்து போட்டியை எதிர்கொள்ளும் விதத்தில் இலங்கை அணி தயார்ப்படுத்தப்பட்




துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பென சகலதுறைகளிலும் இலங்கை அணி வலுவாக உள்ளது. வழமையாக இலங்கை அணி 'ருவென்ரி-20' மற்றும் ஒருநாள் போட்டிகளில் சிறப்பாகவே செயற்பாடுகிறது. இதனால் இந்தத் தொடரில் அவுஸ்திரேலிய அணி சற்று நெருக்குதலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இலங்கை அணிக்கு அவுஸ்திரேலிய தொடருக்காக முன்னாள் வீரர் ருமேஷ் ரட்ணாயக்க பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சுமார் ஒரு மாத காலம் நடைபெறும் ருவென்ரி-20 ஒரு நாள் மற்றும் டெஸ்ட் தொடருக்காக ருமேஷ் ரட்ணாயக்க தனது திறமையை பயன்படுத்தி இலங்கை அணிக்கு சிறப்புப் பயிற்சிகளை வழங்கி வருகின்றார்.

ருமேஷ் ரட்ணாயக்கவின் வித்தியாசமான அணுகுமுறையும் பயிற்சி டுள்ளது.

இது போன்றே அவுஸ்திரேலிய அணியும் இளம் வீரர்களை இத் தொடருக்கு நன்கு தயார்ப்படுத்தியுள்ளது. அந்நிய மண்ணென்றாலும் தங்கள் திறமையில் நம்பிக்கை வைத்து அவுஸ்திரேலிய அணியும் களமிறங்குகிறது.

# கோடிகள் குவிக்கும் சரபோவா

அதிகம் பணம் சம்பாதிக்கும் வீராங்கனைகளில் ஷரபோவா முதலிடம் வகிப்பதுடன் ஓராண்டில் 277 கோடி ரூபா வருவாயை ஈட்டி வருகிறார்.

உலகில் அதிகம் பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீராங்கனைகளின் பட்டியலில் ரஷ்ய டெனிஸ் புயல் மரிய ஷரபோவா தொடர்ந்து 7 ஆவது ஆண்டாக முதலிடம் வகிக்கிறார். இத்தனைக்கும் அவர் 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு எந்த கிராண்ட்ஸ்லாம் பட்டமும் வெல்லவில்லை. ஆனால், விளம்பரம், மொடலிங் மூலம் அவர் கோடிக் கணக்கில் பணம் சம்பாதித்து வருகிறார்.

ஆண்டில் அவரது மொத்த வருவாய் 277 கோடி ரூபாவாகும். அவருக்கு அடுத்த இடத்தில் நம்பர் வன் டெனிஸ் வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி உள்ளார். அவர் சம்பாதித்த தொகை 138 கோடி ரூபாவாகும்.

அதிக வருவாய் ஈட்டிய 'முதல்-10' வீராங்கனைகளில் 7 பேர் டெனிஸ் துறையைச் சேர்ந்தவர்கள். அமெரிக்காவின் போர்ப்ஸ் பத்திரிகை இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. கோடிகளில் புரளும் முதல் 10 வீராங்கனைகள் வருமாறு:

| வீராங்கனை | நாடு | விளையாட்டு | தொகை |
|---|---|---|---|
| ஷரபோவா | ரஷ்யா | டெனிஸ் | 277 கோடி ரூபா |
| வோஸ்னியாக்கி | டென்மார்க் | டெனிஸ் | 138 கோடி ரூபா |
| டேனிகா பாட்ரிக் | அமெரிக்கா | மோட்டார் ரேசிங் | 132 கோடி ரூபா |
| வீனஸ் வில்லியம்ஸ் | அமெரிக்கா | டெனிஸ் | 127 கோடி ரூபா |
| கிம் கிலிஸ்டர்ஸ், | பெல்ஜியம் | டெனிஸ் | 122 கோடி ரூபா |
| செரீனா வில்லியம்ஸ் | அமெரிக்கா | டெனிஸ் | 116 கோடி ரூபா |
| கிம் யூனா | தென்கொரியா | ஸ்கேட்டிங் | 111 கோடி ரூபா |
| லீ நா, | சீனா | டெனிஸ் | 88 கோடி ரூபா |
| இவானோவிச் | செர்பியா | டெனிஸ் | 67 கோடி ரூபா |
| பவுலா கிரீமர் | அமெரிக்கா | கோல்ப் | 61 கோடி ரூபா |






# ஆட்ட முறையில் மாற்றம்

அமெரிக்க கால்பந்து அணிக்கு புதிய ஆட்ட முறை (ஸ்ரைல்) உருவாக்கப்படுவதாகப் பயிற்சியாளர் கிளின்ஸ்மான் உறுதியளித்துள்ளார்.

ஜேர்மனி கால்பந்து அணியின் முன்னாள் பயிற்சியாளரான ஜீர்கன் கிளின்ஸ்மான் தற்போது அமெரிக்க கால்பந்து அணியின் பயிற்சியாளராக உள்ளார்.

புதிய பயிற்சியாளர் பொறுப்பை ஏற்று உள்ள கிளின்ஸ்மான் அமெரிக்க கால்பந்து அணிக்கு புதிய ஸ்ரைலை ஏற்படுத்துவேனென உறுதியளித்துள்ளார்.

கிளின்ஸ்மான் 1990 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற ஜேர்மனி அணியில் விளையாடியவர். அவர் 2006 ஆம் ஆண்டு ஜேர்மனி தேசிய அணியை உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டி வரை முன்னேற்றுவதற்கு கடுமையாக விளையாடியவர்.



அமெரிக்கக் கால்பந்து அணி பயிற்சியாளர் பொப் பிராட்லி நீக்கப்பட்ட 24 மணி நேரத்தில் கிளின்ஸ்மான் அமெரிக்க பயிற்சியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

47 வயது கிளின்ஸ்மான் அமெரிக்காவுக்கு புதியவர் அல்ல. அவர் அமெரிக்காவில் தான் தற்போது வசிக்கிறார். அவரது மனைவி அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

அமெரிக்க கால்பந்து வீரர்களின் ஆடும் திறனை கிளின்ஸ்மான் ஏற்கனவே அறிந்துள்ளார். வார இறுதியில் 6 அமெரிக்க வீரர்களிடம் கிளின்ஸ்மான் பேசி ஆலோசனை கூறியுள்ளார். இதர வீரர்களையும் அவர் சந்திக்கிறார்.

# ஆசியாவின் அரசியல் வாரிசுகள் பட்டியலின் புதிய நட்சத்திரம்

உலக வலம்

ச.துஷ்யந்தினி









ஆசியாவின் தலைமைத்துவ வரலாற்றில் தமது பெயர்களைப் பதிவு செய்த பெண் அரசியல் வாரிசுகளின் பட்டியலில் புதிதாக இடம்பிடிக்கவுள்ளவர் தாய்லாந்தின் யிங்க்லக் சினாவத்ரா.

தாய்லாந்தின் முதலாவது பெண் பிரதமரென்ற பெருமையைத் தனதாக்கவுள்ள யிங்க்லக் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் தக்சின் சினாவத்ராவின் சகோதரி என்பதும் தக்சினுக்கு தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலையின் காரணமாக களமிறக்கப்பட்ட யிங்க்லக் தக்சினின் ஆதரவாளர்கள் மத்தியில் அமோக ஆதரவைப் பெற்றிருப்பதும் ஏற்கனவே ஆராயப்பட்ட விடயங்கள்.

கடந்த ஜூலை 3 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் யிங்க்லக் தலைமையிலான பியு தாய்க் கட்சி பாராளுமன்றத்தின் 500 ஆசனங்களில் 265 ஆசனங்களைக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

எனினும் தேர்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகள் முடியும் வரை யிங்க்லக்கின் வெற்றியை உறுதிப்படுத்துவதை தேர்தல் ஆணையகம் இடைநிறுத்தியிருந்த போதும் நாட்டின் தேர்தல் வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு பலத்த ஆதரவைப் பெற்றுள்ள யிங்க்லக்கின் வெற்றியை தடை செய்வது சாத்தியமற்றதாகியுள்ளது.

இதனால் ரியல் எஸ்டேட் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்தவரும் அரசியல் கற்றுக்குட்டியுமான 44 வயதான யிங்க்லக் நாட்டின் பிரதமராவது உறுதியாகியுள்ளது.

தக்சினின் கைப்பொம்மையாகவே யிங்க்லக் செயற்படுவாரெனப் பெரிதும் எதிர்பார்க்கப்படும் நிலையில், கிராமப்புறங்களில் வாழும் ஏழைகளின் நலன்களை விருத்தி செய்வது குறித்து தனது ஆட்சிக் காலத்தில் தக்சின் கவனம் செலுத்தியிருந்தமையால் இலட்சக்கணக்கான ஏழைமக்களின் தேவைகள் தொடர்பில் யிங்க்லக்கும் கவனம் செலுத்துவாரென்பதே அவரது ஆதரவாளர்களின் நம்பிக்கையாகும்.

நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாக இராணுவமும் விளங்கும் நிலையில் அரசியல் ஸ்திரமற்ற ஒரு நாட்டின் அரசாங்கத்தை அதன் பதவிக்கால முழுமைக்கும் யிங்க்லக்கினால் வழிநடத்த முடியுமா என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

இது இவ்வாறிருக்க உலகின் ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் ஆசியாவில், அரசியல் குடும்பப் பின்னணியைக் கொண்டவர்களாகவும் வசீகரமான தோற்றத்தைக் கொண்டவர்களாகவும் விளங்கும் பெண்கள் மட்டுமே இவ்வாறான தலைமைப் பதவிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்களின் அரசியல் பிரவேசத்திற்கு குடும்பப் பெயர்களும் தலைமைத்துவப் பதவியிலிருந்த ஆண்களின் சடுதியான மரணமும் காரணமாகிறது.

கணவரின் படுகொலையைத் தொடர்ந்து அரசியலுக்கு வந்த இலங்கையின் சிறிமாவோ பண்டாரநாயக்க 1960 களில் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையைத் தனதாக்கிக் கொண்டார். இவரைத் தொடர்ந்து இவரது மகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இரு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தார்.



சிறிமாவோ பண்டாரநாயக்க பதவிக்கு வந்த ஒரு தசாப்தங்களில் கணவரின் படுகொலையைத் தொடர்ந்து பிலிப்பைன்ஸின் ஜனாதிபதியாக கொரசொன் அகியுனோ பதவிக்கு வந்தார்.

இதேவேளை, பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் மறைவைத் தொடர்ந்து இந்தியாவில் இந்திரா காந்தியும் ஷுல்பிகார் அலி பூட்டோவின் மறைவைத் தொடர்ந்து பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோவும் முஜியுர் ரஹ்மானின் மறைவைத் தொடர்ந்து பங்களாதேஷில் ஷேய்க் ஹசீனாவும் இந்தோனேசியாவில் மேகவதி சுக்ர்னோபுத்ரியும் அரசியலில் பிரவேசித்தனர்.

மேலும் சுதந்திரப் போராட்ட கதாநாயகரான தந்தை ஆங்சானின் மரணத்தைத் தொடர்ந்து மியன்மாரின் ஆங்சான் சூகியும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிய போதும் இராணுவ ஆட்சியாளர்களினால் அவரது முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

பால் சமத்துவத்தின் முன்னேற்றத்தைக் காட்டிலும் அரசியல் பரம்பரையின் மூலமான சிறப்புரிமையே ஆசியாவில் வியாபித்துள்ளது.

இப்பிராந்தியத்தின் அரசியல் தலைவர்களின் தமது இரத்த உறவுகள் மீதான நம்பிக்கைக்கு முன்னுரிமை அளிப்பதே இதற்கான பிரதான காரணமாகும்.

தலைமைப் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு நெருக்கமான உறவுகளில் ஆண்கள் இல்லாத பட்சத்தில் அவ்வாப்பு பெண்களை சென்றடைகின்து.

அரசியல் குடும்பப் பின்னணியைக் கொண்ட தலைமைத்துவம் உலகின் ஏனைய பகுதிகளிலும் காணப்படுகின்ற போதிலும் வேறுவழிகளில் அன்றி குடும்பப் பின்னணியின் மூலமாக பெண்கள் அரசியலுக்கு வருவது ஆசியாவிலேயே அதிகளவாக உள்ளது.

இதன் பிரகாரம் அரசியல் ஆளுமை, தலைமைத்துவத்திற்கு என்பவற்றுக்கு அப்பால் யிங்க்லக்கின் குடும்பப்பின்னணி இளமை சிறந்த தோற்றம் என்பவையே வாக்காளர்களைக் கவர்ந்திருந்ததாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இவ்வாறான நாடுகளின் பாராளுமன்றங்களில் பெண்களால் அரசியல் பிரதிநித்துவம் குறைவாகவே காணப்படுகிறது.

அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற அயல் பிராந்தியங்களில் தமது சொந்தத் திறமைகளின் மூலமாக கைப்பற்றியுள்ள நிலையில் ஆசியாவில் மட்டுமே அரசியல் குடும்ப சிறப்புரிமைக்கான போக்கு மாற்றமடையாமல் இருக்கிறது.

அண்மையில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்ட ஹினா ரபாணிகர் கூட அரசியல் குடும்பப் பின்னணியைக் கொண்டவராவார்.

இது மட்டுமன்றி இவரது முக்கியத்துவம் மிக்க பதவிக்குரிய ஆளுமை, திறன் அவரிடம் இருக்கிறதா என்பதை ஆராயாமல் ஒரு மொடல் அழகியை விபரிப்பது போல் ஹினாவின் நடை, உடை அலங்காரம் மற்றும் அழகு என்பவற்றுக்கே பெருமளவான ஊடகங்கள் முன்னுரிமை அளித்திருந்தன.

பல பெண் தலைவர்களை ஆசியா கண்டிருந்த போதும் சமத்துவத்திற்கான காத்திரமான நடவடிக்கைகளோ பெண் உறுதிப்படுவதற்கான ஏற்பாடுகளையோ இப்பிராந்தியம் இதுவரை காணவில்லை.









இந்திரா காந்தி போன்ற ஆளுமையும் வசீகரமும் ஒருங்கே அமையப் பெற்ற குறிப்பிட்ட சில தலைவர்களைத் தவிர ஆளுமையைப் புறந்தள்ளி வசீகரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்வரை வரை வரவேற்கத்தக்க மாற்றம் எதனையும் எதிர்பார்க்க முடியாதென்பதே யதார்த்தமாகும்.










இலங்கையிலுள்ள
பிரிட்டன் உயர்
ஸ்தானிகராலயத்தில்
அண்மையில்
நடைபெற்ற
பிரிட்டன் இலங்கை
ஆடை வடிவமைப்பு
கண்காட்சியில்
இடம்பெற்ற காட்சிகள்.
படப்பிடிப்பு:
எஸ்.கிரிசாந்

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.